بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 37

ஆசிரியர் முஸ்லஹ்ம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

08 ஸஃபர் 1443 ஹிஜ்ரி கமரி 16 தபூக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 16 செப்டம்பர் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

وَإِذَا سَمِعُوا مَا أُنزِلَ إِلَى الرَّسُولِ
تَرَىٰ أَعْيُنَهُمْ تَفِيضُ مِنَ الدَّمْعِ مِمَّا
عَرَفُوا مِنَ الْحَقِّ ۖ يَقُولُونَ رَبَّنَا آمَنَّا
فَاكْتُبْنَا مَعَ الشَّاهِدِينَ

இத்தூதருக்கு இறக்கப்பட்ட (இறைவசனத்)தை அவர்கள் செவியேற்கும்போது, அவர்கள் உண்மையினைத் தெரிந்து கொண்டதன் காரணமாக, அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வழிவதை நீ காண்கின்றாய். எங்கள் இறைவா! நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே எங்களை(யும்) சாட்சி கூறுபவர்களுடன் எழுதிக் கொள்வாயாக என்று அவர்கள் கூறுகின்றனர். (5:84)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனித வாழ்க்கையின் நோக்கம் “சிராத்தே முஸ்தகீம்” வழி நடப்பதும், மேலும் அதனை தேடுவதுமாகும். அவை இந்த சூராவில் இந்த சொற்களில் கூறப்பட்டுள்ளது**

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

**அல்லாஹ்வே! நீ அருள்புரிந்த மக்களின் நேரான வழியை எங்களுக்கு காட்டுவானாக**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### இறைநேசமும், அருளும்

(இறை) அன்பு எப்படிப்பட்ட ஒரு விஷயம் என்றால் மனிதனின் கீழான வாழ்க்கையை எரித்து அவனை ஒரு புதிய மற்றும் தூய்மையான மனிதனாக ஆக்கி விடுகின்றது. முன்னர் அவன் பார்க்காததை பார்ப்பான். மேலும் முன்பு அவன் கேட்காததை கேட்கின்றான். சுருக்கமாக அருள் மற்றும் கருணையின் விருந்தாக மனிதனுக்கு இறைவன் ஆயத்தப்படுத்தியுள்ளதை பெறுவதற்காக அவனுக்கு ஆற்றல்களையும் இறைவன் வழங்கியுள்ளான். அந்த ஆற்றல்களை அவன் வழங்கியிருந்து ஏற்பாடுகள் இல்லாமல் இருந்திருந்தால் அது ஒரு குறையாக இருந்திருக்கும். அல்லது ஏற்பாடுகள் இருந்து ஆற்றல்கள் வழங்கப்படாமல் இருந்திருந்தால் அது ஒரு குறையாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு இல்லை. (இறைவன் மனிதனுக்கு) ஆற்றல்களையும் வழங்கியுள்ளான். ஏற்பாடுகளையும் செய்துள்ளான். ஒரு பக்கம் ரொட்டிக்கான ஏற்பாடும் மற்றொரு பக்கம் கண், நாவு, பல், இரைப்பை ஆகியவற்றையும் வழங்கியுள்ளான். மேலும் கல்லீரல் மற்றும் குடலை அந்த பணியில் ஈடுபடுத்தியுள்ளான். இந்த அனைத்து பணிகளின் அடித்தளமும் உணவின் மீது வைக்கப்பட்டுள்ளது. உள்ளே எதுவுமே செல்லவில்லையென்றால் பின்னர் இதயத்திற்கு ரத்தம் எங்கிருந்து வரும்? நிணநீர் எங்கிருந்து உருவாகும்? இதேபோன்று எல்லாவற்றையும் விட அவன் முதலில் இந்த அருளை செய்துள்ளான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

**إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ இந்த இறைவசனம் இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கு ஒரு மாபெரும் சான்றாகும். திருக்குர்ஆன் எழுத்தப்படிக்கத் தெரியாதவர்களிடம் இறங்கியது. எல்லா வகையிலும் பாதுகாப்பாக உள்ளது. இது, திருக்குர்ஆன் இறைவன் புறமிருந்து இறங்கியதற்கான மாபெரும் சாட்சியம் ஆகும். ஆனால் தவ்ராத் மற்றும் இஞ்ஜீல் தமது காலத்து அறிவார்ந்த சமுதாயங்களிடம் வந்தது. ஆயினும் அது பாதுகாப்பாக இருக்கவில்லை**

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

பொருள்: (குர்ஆனாகிய) இந்த அறிவுரையை நாமே இறக்கினோம். மேலும் நிச்சயமாக இதனை நாமே பாதுகாப்போம். (15:10)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த வசனம் இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கு ஒரு மாபெரும் சான்றாகும். காழ்ப்புணர்ச்சி இல்லாத ஒரு மனிதன் இந்த வசனத்தை சீர்தூக்கிப் பார்த்தால் மேற்கண்ட இந்த வாதம் மனிதனுடைய வாதம் அல்ல என்பதை புரிந்து கொள்ள முடியும். இந்த சூரா மக்காவில் அருளப்பட்டது என்பதில் அனைத்து விரிவுரையாளர்களும் ஒன்றுபட்டுள்ளனர்.

இப்னு ஹஷ்ஷாம் இவ்வாறு கூறுகின்றார்: இந்த வசனம் நபித்துவ வாதத்தின் நான்காம் ஆண்டில் இறங்கியது. தற்கால ஆராய்ச்சியாளர்களான அரபிகளும், ஐரோப்பிய விரிவுரையாளர்களும் இணைந்து இந்த சூரா மக்கி சூரா என்பதில் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். மக்கா வாழ்க்கையின் இறுதி ஆண்டு மிகவும் அபாயகரமானதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் ஷுஅப் அபி தாலிபில் முற்றுகையிடப்பட்டிருந்தார்கள். அப்போது முஸ்லிம்களுக்கு தமது பாதுகாப்பிற்கு கூட எந்த இடமும் கிடைத்திருக்கவில்லை. அதுபோன்ற நேரத்தில் வானவர்களுக்கு என்ன அவசியம் வந்து விட்டது? நாம் சுயமே அதனை பாதுகாப்போம் என்று அல்லாஹ் கூறுவது எத்துணை வலிமை வாய்ந்த கம்பீரமிக்க வாதமாகும். إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ (குர்ஆனாகிய) இந்த அறிவுரையை நாமே இறக்கினோம். மேலும் நிச்சயமாக இதனை நாமே பாதுகாப்போம்) என்பதன் வலிமையை

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

## நபிமொழி

### தர்மம் செய்தல், உறவைப் பேணுதல், செல்வத்தை செலவிடுதல் ஆகியவற்றின் சிறப்புகள்

1436: ஹஸ்ரத் ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே! நான் அறியாமைக் காலத்தில் (இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் முன்பு) நான் எந்த காரியங்கள் மூலம் பாவங்களுக்கு பரிகாரம் செய்தேன் என்பதை தாங்கள் அறிவீர்கள். அதாவது தர்மம் செய்தல், அல்லது அடிமைகளை விடுதலை செய்தல், உறவைப் பேணுதல் போன்ற (நல்ல காரியங்களை நான் செய்துள்ளேன்). அவற்றிற்கு நற்கூலி உண்டா? என கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீர் முன்னர் செய்த அந்த நற்செயல்களின் காரணமாகவே இஸ்லாத்தைத் தழுவியுள்ளீர் என்று பதிலளித்தார்கள். (புகாரி தொகுதி 3 கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**எல்லோரிடத்தும் அன்பு எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

**நேர்மையை நேசிப்போம் நேர்மையின்மையை வெறுப்போம்**

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை 06 ஆகஸ்ட் 2021 (முழுவதுமாக)*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஜல்ஸா சாலானா பிரிட்டன் – 2021 ஆம் ஆண்டு தொடர்பாக உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய நம்மவர்கள் மற்றும் அந்நியர்களின் அசாதாரண உணர்வுகள் மற்றும் தாக்கங்கள். மேலும் ஜல்ஸாவை கேட்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சிகரமான விளைவுகளை குறித்த பயான்**

**எனவே நான் அனைத்து ஊழியர்களுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன். இந்த அசாதாரண சூழலில் ஒரு வகையில் ஒரு மிகப்பெரிய முடிவு எடுக்கப்பட்டிருந்தது. அடுத்து கால நிலையும் மோசமாக இருந்தது. அவ்வாறு இருந்தபோதிலும் அனைவரும் தன்னலமற்று பணி செய்தார்கள்**

**சிறப்பான ஏற்பாடுகளுடன் நடைபெற்ற இந்த வருட ஜல்ஸா அல்லாஹ்வின் அருட்களின் வாசல்களை எவ்வாறு திறந்த விட்டன என்றால் மனிதன் அதன் காரணமாக இறைவனுக்கு நன்றி செலுத்தியவாறு அவன் முன்னால் குனிந்து கொண்டே செல்கின்றான்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 ஆகஸ்ட் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஸுஹுர்** மாதம் **13 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا

خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

அஹ்மதிய்யா ஜமாஅத் பிரிட்டனின் ஆண்டு மாநாடு ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு (அல்லது இரண்டு வருடத்திற்குப் பிறகு என்று கூற வேண்டும்) கடந்த ஜுமுஆ நாளன்று தொடங்கி தனது ஆன்மீக சூழலின் காட்சிகளை காட்டியவாறு கடந்த ஞாயிறு அன்று நடந்து முடிந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் கொரோனா தொற்றின் காரணமாக ஜல்ஸாவை நடத்த முடியாமல் போனது. இந்த வருடமும் நிலவரம் ஏறக்குறைய அதுபோன்றே இருந்து. எனவே இந்த வருடமும் ஜல்ஸா நடக்காது என்று ஜல்ஸாவின் நிர்வாகம் நினைத்திருந்தது. எனவே இந்த சூழ்நிலையின் காரணமாக ஜல்ஸாவின் தயாரிப்புகளின் பக்கம் கவனம் செலுத்தவில்லை. கடந்த குத்பாவிலும் நான் இது குறித்து கூறியிருந்தேன். ஜல்ஸா இன்ஷா அல்லாஹ் நடைபெறும் என்று அவர்களிடம் கூறப்பட்டபோது அவர்கள் தயாரிப்புகளை செய்யத் தொடங்கினர். ஆயினும் முழு ஆர்வத்துடன் தயாரிப்புகள் நடைபெறவில்லை என்றே எனக்கு தெரிய வந்தது. நிர்வாகம் இவ்வாறு Relaxed ஆக இருக்குமென்றால் பின்னர் ஊழியர்களும் இதே எண்ணத்தை உடையவர்களாகவே இருப்பார்கள் என்ற கவலை எனக்கு இருந்தது. ஆயினும் இன்ஷா அல்லாஹ் ஜல்ஸாவின் ஏற்பாடுகளை சிறந்ததாக ஆக்கி விடுவான். மேலும் பணி செய்யக்கூடியவர்களும் கிடைத்து விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு அல்லாஹ்வின் மீது இருந்தது. எனவே ஒரு சந்தர்ப்பத்தில் மிகவும் அழுத்தத்துடனும், கடினத்துடனும் எனக்கு இவ்வாறு கூற நேரிட்டது. அதாவது நீங்கள் இதேபோன்று மனமில்லாமல் பணி செய்து வந்தால், மேலும் ஜல்ஸா நடக்குமா? நடக்காதா? என்ற எண்ணத்துடன் நீங்கள் செயல்பட்டு வந்தால், மேலும் அவநம்பிக்கையை நீங்கள் வெளிப்படுத்தி வந்தால் பின்னர் நான் புதிய நிர்வாகக் குழுவை நியமித்து விடுகின்றேன் என்று எனக்கு கடினமாக கூற நேரிட்டது.

எவ்வாறிருப்பினும் எனது இந்தக் கூற்று அவர்களிடம் ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. மேலும் வேகத்துடன் பணி செய்யத் தொடங்கி விட்டனர். தாமதமாக தொடங்கி இருந்தாலும் பணி நடந்தது. அடி மட்டத்தில் பணி செய்யக்கூடிய ஊழியர்கள் அதாவது தன்னார்வ தொண்டர்களே அசல் படைகள் ஆவர். அவர்களே Man Power ஆக இருக்கின்றார்கள். அவர்கள் ஏற்கனவே நிம்மதியிழந்து இருந்ததாக தெரிய வந்தது. உடனடியாக ஜல்ஸாவின் ஏற்பாடுகளுக்காக எல்லா பக்கங்களிலிருந்தும் தன்னார்வ தொண்டர்கள் வரத் தொடங்கி விட்டனர். ஜல்ஸாவின் நாட்களில் டியூட்டி கொடுப்பவர்கள் வரிசைகளில் நின்று விட்டனர். இந்த ஜல்ஸா சிறிய அளவில் நடைபெறுகின்றது. எனவே ஊழியர்களை எவ்வாறு தேர்வு செய்வது? என்பதில் கஷ்டம் ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் ஆண்களும், லஜ்னாக்களும் ஊழியர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். லஜ்னாவைப் பொறுத்தவரை டியூட்டி கொடுப்பதற்கு ஐந்தில் ஒரு பங்கை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அநேகமாக ஆண்கள் மூன்றில் ஒரு பகுதி ஊழியர்களை குறைத்துக் கொண்டார்கள். இந்தப் பணிக்காக தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் நமக்கு தொண்டாற்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று நிராசை அடைந்தனர்.

எனவே நான் முதலில் அந்த அனைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும், இளைஞிகளுக்கும், இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் இதனைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அல்லாஹ் எண்ணங்களுக்கு நற்கூலி வழங்கக்கூடியவன் ஆவான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற உங்களது எண்ணம் முழுமையடைந்து விட்டது. சில காரணங்களால் உங்களுக்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லையென்றாலும் அல்லாஹ் உங்களின் எண்ணத்தின் காரணமாக உங்களை நற்கூலியிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்க மாட்டான். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் இந்த தொண்டின் உணர்வுகளுக்கான சிறந்த நற்கூலியை வழங்குவானாக என்று நான் துஆ செய்கிறேன்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால் எனது வழிமுறைக்கேற்ப ஜல்ஸாவிற்குப் பிறகு வரும் ஜுமுஆவில் நான் ஊழியர்களுக்கு அதாவது பல்வேறு துறைகளில் பணி செய்து வந்த அல்லது பணி செய்து கொண்டிருக்கின்ற ஊழியர்களுக்கு நான் நன்றி செலுத்துவேன். மக்களும் எனக்கு கடிதம் எழுதுகின்றனர். உலகிலிருந்து கடிதம் எழுதக் கூடியவர்களும் இந்த தன்னார்வ தொண்டர்களுக்கு நன்றி செலுத்தி வருகின்றனர். யாருக்கு எங்கு என்ன டியூட்டி இருந்ததோ அவர்கள் அதற்குரிய உரிமையை வழங்க அங்கு முயற்சி செய்தனர். மழையின் காரணமாக ஒரு நேரத்தில் பார்க்கிங்கிலிருந்து கார்களை வெளியேற்றுவது ஒரு மிகப்பெரும் பிரச்சனையாக ஆகி விட்டது. அங்கு தன்னார்வ தொண்டர்கள் அசாதாரண பணி செய்தனர். காரை தூக்கி சேற்றிலிருந்து வெளியேற்றி வைத்தனர். இதில் அவர்களுடன் வேறு சில துறைகளைச் சேர்ந்த ஊழியர்களும் பங்கெடுத்தனர். நாங்களும் பங்கு பெறுகின்றோம் என்று சிலர் எனக்கு எழுதியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் அதன் பிறகு அந்த பார்க்கிங்கின் நிலைகளைக் கண்டு வேறொரு இடத்தில் பார்க்கிங் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் எவ்வாறிருப்பினும் முதல் நாள் மற்றும் இரண்டாவது நாள் அல்லது இரண்டாவது நாளின் சிறிது பகுதி வரை அங்கு கார்கள் வந்திருந்தன. அவற்றை அங்கிருந்து வெளியேற்றுவது பெரும் கஷ்டமாக இருந்தது. இந்த கடினத்தை கேமராவின் கண்களும் கண்டு கொண்டன. MTA உலகிற்கும் காட்டி விட்டது. அதன் மூலமாக உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள நம்மவர்களும், அந்நியர்களும் இந்த காட்சிகளை கண்டு கொண்டனர். அவர்கள் பெரும் ஆச்சரியத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இன்னும் கூறப்போனால் இன்று உலகில் இந்த காட்சிகள் நம்ப முடியாத காட்சிகளாகும் என்று ஜமாஅத் அல்லாதவர்களும், முஸ்லிம் அல்லாதவர்களும் இந்த காட்சிகளை பார்த்த பிறகு கூறியுள்ளனர். அதிகாரியாக இருப்பவரும் ஊழியராக இருப்பவரும் அனைவரும் அந்த கார்களை சேற்றிலிருந்து வெளியேற்றுவதற்கு சுயமே சேற்றில் இறங்கினர். இந்த மக்கள் யார் என்றால், இவர்கள் ஜின்களைப் போன்று பணி செய்கின்றவர்கள் ஆவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு அல்லாஹ் இந்த மக்களை வழங்கியுள்ளான்.

அடுத்து இதேபோன்று வேறு சில துறைகளும் உள்ளன. தூய்மைக்கான துறை உள்ளது. உணவு வழங்குகின்ற துறை உள்ளது. உணவு சமைக்கின்ற, ரொட்டு சுடுகின்ற துறை உள்ளது. பின்னர் எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் வாய்ந்தவை துவக்கத்தில் ஜல்ஸாவின் ஏற்பாடுகளுக்கான துறை, கூடாரம் அமைக்கின்ற துறை போன்ற துறைகள் ஆகும். விரிப்புகள் விரிக்கின்ற பணிகள் இருந்தன. அதாவது ஜல்ஸாவின் முழுமையான ஏற்பாடுகளை செய்வதற்காக தன்னார்வ தொண்டர்கள் ஜல்ஸாவிற்கு முன்னதாகவே பல வாரங்கள் வந்து சென்றனர். அடுத்து தற்போது Windup செய்வதற்கும் பல நாட்கள் ஆகுகின்றன. எனவே இவ்வாறு பல்வேறு துறைகளின் இந்த அனைத்து பணிகளையும் உலகம் பார்த்தது. MTA மற்றும் Live Streaming மூலமாக இந்த ஜல்ஸாவை பார்த்துக் கொண்டிருந்த உலகம் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானது. வந்திருந்த விருந்தினர்களும் நன்றியுணர்வை வெளிப்படுத்தியவர்களாக இருந்தனர். MTA உலகிற்கு இந்த காட்சிகளை காட்டியது. நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கும், பல்வேறு காட்சிகளை காட்டுவதற்கும் மிகவும் கடினமாக உழைத்துள்ளனர். அதற்குரிய உரிமைகளை MTA நிறைவேற்றியுள்ளது. ஜல்ஸாவை மட்டும் காட்டவில்லை. மாறாக உலகின் பல்வேறு நாடுகளில் ஒன்றுகூடி ஜல்ஸாவை பார்க்கும் அனைவரையும் இங்கு ஜல்ஸாவில் நமக்கு காட்டி விட்டனர். இவ்வாறு முழு உலகையும் நமக்கு காட்டி விட்டனர். எனவே ஆரம்ப பணிகளிலிருந்து ஜல்ஸா நடக்கின்ற நாட்களில் செய்யப்பட்ட பணிகள் மேலும் ஜல்ஸா திடலில் அறிவார்ந்த மற்றும் தர்பிய்யத் நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் போன்றவற்றை அவர்களுக்கு காட்டுவதற்கும் MTA மிகச் சிறந்த வழிமுறையாக இருந்தது. அந்த ஊழியர்கள் அதற்கு பணி செய்தனர். அனைத்துலக மக்களும் பார்த்த அஹ்மதிகளும், அன்னியர்களும் இதனைக் கண்டு ஆச்சரியம் அடைந்தனர். மேலும் தங்களுக்கு இந்த காட்சிகள் காணக் கிடைத்தற்கு நன்றியும் செலுத்தி வருகின்றனர். இது ஒரு விநோதமான உலகளாவிய குடும்பத்தின் வரைபடத்தை வரைந்திருந்தது. எனவே நான் அனைத்து ஊழியர்களுக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன். இந்த அசாதாரண சூழலில் ஒரு வகையில் ஒரு மிகப்பெரிய முடிவு எடுக்கப்பட்டிருந்தது. அடுத்து கால நிலையும் மோசமாக இருந்தது. அவ்வாறு இருந்தபோதிலும் அனைவரும் தன்னலமற்று பணி செய்தார்கள். ஜல்ஸாவின் டியூட்டிகளுக்குரிய உரிமைகளை செலுத்தினார்கள். உலகில் இந்த ஜல்ஸாவை பார்க்கக் கூடியவர்கள் சார்பாக நான் நன்றி செலுத்துகின்றேன். ஏராளமான நன்றி கடிதங்கள் எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஊழியர்களுக்கு நன்றி செலுத்தி விட்டு இன்று நான் எனது வழக்கமான குத்பாவின் கட்டுரையை எடுத்துரைக்கலாம் என்பது எனது எண்ணமாக இருந்தது. ஆனால் ஜல்ஸாவின் தாக்கங்கள், ஜல்ஸாவை கேட்ட பிறகு ஏற்பட்ட மகிழ்ச்சிகரமான விளைவுகள் மற்றும் அன்னியர்களின் அசாதாரண உணர்வுகள் ஆகியவற்றின் வெளிப்பாடுகள் அறிக்கைகளின் வடிவில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பெரும் எண்ணிக்கையில் வந்துள்ளன. கடிதங்களும் வருகின்றன. எனவே இந்த வருடமும் எப்போதும் போன்று இந்த தாக்கங்களையும், அருட்களையும் இன்றைய குத்பாவில் எடுத்துரைக்கலாம் என நான் நினைத்தேன். அனைத்தையும் எடுத்துரைப்பது சாத்தியமல்ல. சில உதாரணங்களை நான் எடுத்துள்ளேன். சிறப்பான ஏற்பாடுகளுடன் நடைபெற்ற இந்த வருட ஜல்ஸா அல்லாஹ்வின் அருட்களின் வாசல்களை எவ்வாறு திறந்த விட்டன என்றால் மனிதன் அதன் காரணமாக இறைவனுக்கு நன்றி செலுத்தியவாறு அவன் முன்னால் குனிந்து கொண்டே செல்கின்றான். இந்த அனைத்து நிலவரங்களுக்குப் பிறகும் அல்லாஹ் ஜமாஅத்தின் மீது எப்படி எப்படியெல்லாம் அருள் பொழிந்துள்ளான்! ஒரு குறையை மக்கள் பொதுவாக வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது இந்த வருடம் உலகளாவிய பைஅத் நடைபெறவில்லை. அதனை அவர்கள் மிகவும் எதிர்பார்த்திருந்தனர். தற்போதைய சூழலில் (உலகளாவிய) பைஅத் செய்வது என்பது எவ்வாறிருப்பினும் கடினமானதாக இருந்தது. நிர்பந்தம் இருந்தது.

இப்போது நான் சுருக்கமாக சில அறிக்கைகளையும், சிறிது தாக்கங்களையும் எடுத்துரைக்கின்றேன். இந்த ஆண்டு முதல் முறையாக ஜமாஅத்துகள் Live Streaming மூலமாக ஜல்ஸாவில் கலந்து கொண்டன. அதாவது தத்தமது இடங்களில் அமர்ந்து கொண்டு ஜல்ஸாவை கேட்டுக் கொண்டிருந்தனர். மேலும் இங்கு ஜல்ஸா திடலிலும் திரையில் மக்கள் தென்பட்டுக் கொண்டிருந்தனர். யூ.கே–வில் ஐந்து இடங்களில் ஒட்டுமொத்தமாக ஜல்ஸாவை காண்பதற்கு ஏற்பாடுகள் இருந்தன. வேறு சில நாடுகளில் பல மணி நேர கால வித்தியாசம் இருந்தபோதிலும் அங்கு அமர்ந்து கொண்டு கூட்டாக ஜல்ஸாவை கேட்டுக் கொண்டிருந்தனர். அதில் ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, கோயிட்டாமாலா, பங்களாதேஷ் போன்ற நாடுகளும் அடங்கும். யூ.கே மட்டுமின்றி 22 நாடுகளில் 27 இடங்களில் Live Streaming மூலமாக ஜமாஅத் சகோதரர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர். பெண்கள் புறமிருந்தும் இந்த முறை முதன் முதலாக Live Streaming மூலம் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு இருந்தது. அதன் காரணமாக பெண்களும் பல்வேறு நாடுகளிலிருந்து மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒரு உத்தேச கணக்கின் அடிப்படையில் பெண்களுக்கான அமர்வு இருந்தது. சொற்பொழிவுகள் இருந்தன. பெண்களின் இந்த நிகழ்ச்சிகளிலும் 23 அல்லது 25 ஆயிரம் பெண்கள் ஜல்ஸாவை பார்த்தனர் மற்றும் கேட்டனர். இவ்வாறு கலந்து கொள்ளக்கூடிய நாடுகளில் அமெரிக்கா, கனடா, கோயிட்டாமாலா மற்றும் வேறு இரண்டு அல்லது மூன்று இடங்கள் உள்ளன. சில இடங்களில் நான்கு பல்வேறு சென்டர்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கயானா, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, பங்களாதேஷ், மொரிஷியஸ், கபாபீர், இந்தியா, புர்கினோபாஸோ, நைஜீரியா, கேம்பியா, தன்ஸானிய்யா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, சுவீடன், பெல்ஜியம், ஃபின்லாண்ட், ஹாலந்து போன்ற நாடுகளும் பங்கு பெற்றிருந்தன.

நைஜர் நாட்டின் அஹ்மதி அல்லாத ஈஸா சாஹிப் என்ற ஒரு நண்பர் ஜல்ஸாவின் நாட்களில் அதாவது மூன்று நாட்களில் எனது சொற்பொழிவுகளை கேட்பதற்காக மிஷன் ஹவுஸிற்கு வருகை தந்திருந்தார்.

அந்த நண்பர் இவ்வாறு கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத் இஸ்லாத்திற்கு எதிரானது. அவர்கள் பள்ளிவாசலில் TV ஐ வைத்துள்ளனர். அது ஆகுமானதல்ல என்று நான் இதற்கு முன்பு கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் ஜல்ஸாவை பார்த்த பிறகு எனக்கு தெரிந்து விட்டது. அதாவது அனைத்து முஸ்லிம் உலகமும் அஹ்மதிய்யத் ஒற்றுமையுடன் இருப்பதுபோன்று ஒன்றாக ஆகி விட்டால் மேலும் ஜமாஅத் எட்ட வைப்பதுபோன்று இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தால் பின்னர் முஸ்லிம்கள் மிகவும் ஆற்றல் படைத்தவர்களாகி விடுவார்கள். எந்த அளவிற்கென்றால் உலகில் எந்தவொரு சக்தியும் இஸ்லாத்திற்கெதிராக பேச முடியாமல் போய் விடும். அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள ஒற்றுமையும், ஒருமைப்பாட்டையும் நான் ஜல்ஸாவில் கண்டேன். என்னைப் பொறுத்தவரை இது உண்மைக்கான ஒரு சான்றாகும்.

அடுத்து ஸேம்பியா நாட்டில் அஹ்மதி சகோதரர்களும், புது அஹ்மதிகளும் மட்டுமின்றி ஜமாஅத் அல்லாத சிலரும் ஜல்ஸாவை கண்டனர். அங்கு ஓரிடத்தில் ஜமாஅத் அல்லாத 35 மக்கள் ஒன்றுகூடி இருந்தனர். ஒரு கிருஸ்துவ ஆசிரியர் ஜல்ஸாவை பார்த்து விட்டும் கேட்டு விட்டும் இவ்வாறு கருத்து கூறியுள்ளார்.

அதாவது இன்று நான் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்டு விட்டு மிகவும் பாதுகாப்பாக உள்ளேன். எனக்கு இஸ்லாமிய போதனைகளைப் பற்றிய அறிவு கிடைத்துள்ளது. எனது அறிவு மற்றும் புரிதலுக்கு ஏற்ப இஸ்லாம் மட்டுமே ஓர் உண்மையான மார்க்கம். வேறு எந்த மார்க்கமும் உலகில் ஏழைகளுக்கு உதவி செய்யவில்லை என்பதும் எனக்கு தெரிய வந்துள்ளது. நிறைய விஷயங்களை கற்றுக் கொள்வதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

அடுத்து கேபவன் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் இவ்வாறு எழுதுகின்றார்கள்: முஸ்லிம் அல்லாத போலீஸ் அதிகாரி தனது மனைவியுடன் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்பதற்காக மிஷன் ஹவுஸிற்கு வருகை தந்திருந்தார். அதற்கு முன்பு ஜமாஅத் விஷயத்தில் அவர் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் ஜல்ஸாவில் லெபனானைச் சேர்ந்த புதிய அஹ்மதி அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தை அவர் செவியுற்றார். அப்போது ஜல்ஸாவிற்குப் பிறகு நான் எவ்வாறு MTA பார்ப்பது? என்று அவர் கேட்டார். அப்போது Youtube மூலமாகவும் MTA பார்க்க முடியும் என்று அவருக்கு கூறப்பட்டபோது அப்போதே தனது Mobile–ல் Youtube-யை திறந்து MTA பிரென்ச் சேனலை எடுத்தார். மேலும் ஜல்ஸாவை பார்க்க தொடங்கி விட்டார். பின்னர் இனி நான் இந்த சேனலில் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி மேலும் கற்றுக் கொள்வேன் என்று கூறத் தொடங்கி விட்டார்.

நைஜீரியாவிலிருந்து ஜமாஅத் அல்லாத ஒரு நண்பர் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்ட பிறகு

இவ்வாறு கூறினார்:

இந்த ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளிலிருந்து எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. உலகில் ஓர் உண்மையான ஜமாஅத் உள்ளது என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தே ஆகும். நான் விரைவில் அதில் இணைந்து விடுவேன்.

அஹ்மதி அல்லாத மற்றொரு நண்பர் ஜல்ஸா தொடர்பான தாக்கங்களை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்:

நிச்சயமாக இந்த ஜமாஅத் உண்மையாளர்களின் ஜமாஅத் ஆகும். இது நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத் ஆகும். மழையிலும் கூட தன்னார்வ தொண்டர்கள் தமது பணிகளில் மும்முரமாக இருந்ததையும், விருந்தினர்களுக்காக வசதிகளை ஏற்படுத்தி வந்ததையும் நான் கண்டேன். மேலும் இதேபோன்று என்னுடைய பெண்களுக்கான சொற்பொழிவை அவர் கேட்டு மிகவும் தாக்கத்திற்கு ஆளாகி இருப்பதாக கூறுகின்றனர்.

ஜப்பான் நாட்டின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். ஹிரோஷிமாவைச் சேர்ந்த ஜமாஅத் அல்லாத Macshima Osamu என்ற ஜப்பானிய நண்பர் ஒருவர் இருக்கின்றார். நான் ஜப்பான் சென்றிருந்தபோது ஹிரோஷிமாவிற்கும் சென்றிருந்தேன். அப்போது அவர் அங்கு இருந்தார். மேலும் எனக்கு விருந்து உபசரிப்பு செய்திருந்தார். மேலும் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற அமைதிக் கருத்தரங்கிலும் கலந்து கொண்டிருந்தார். அந்த நண்பர் இவ்வாறு கூறுகின்றார்:

நானும் ஜல்ஸாவை பார்க்கின்றேன். இன்று 6 ஆகஸ்ட் குத்பாவையும் கேட்டேன். அப்போது ஜமாஅத் ஜப்பானிற்கு ஆற்றிய தொண்டுகள் நினைவுக்கு வந்து விட்டன. அதாவது ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபா ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 10 ஆகஸ்ட் 1945 ஆம் ஆண்டு ஜுமுஆ நாளில் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணு ஆயுதத்திற்கு எதிராக குரல் கொடுத்து இருந்தார்கள். அந்த குரல் ஹிரோஷிமாவிற்கு ஆதரவாக எழுப்பட்ட முதல் குரலாக இருந்தது. அதன் பிறகு தற்போதைய கலீஃபாவின் சுற்றுப் பயணம் ஹிரோஷிமாவில் நிகழ்ந்தது. அந்த சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட அமைதிக்கான தூதுச் செய்தியும் எனக்கு மிகவும் சிறப்பான பொருளை கொண்டதாக இருந்தது. இன்று ஹிரோஷிமா நாள் சந்தர்ப்பத்தில் MTA பார்க்கும்போது எனக்கு ஏற்பட்ட ஆசை இதுவாகும். அதாவது MTA ஆஃப்ரிக்காவைப் போன்று MTA ஜப்பானும் விரைவில் உருவாக வேண்டும். இரண்டாவதாக, ஜல்ஸாவின் சூழலையும் உலகம் முழுவதும் மக்கள் ஒன்றுகூடியிருப்பதையும் பார்த்து எனது உள்ளத்தில் இந்த உணர்வு மிக அழுத்தத்துடன் உருவாகி வருகின்றது. அதாவது உலகத்தை ஒரு Plat Form–ல் ஒன்று கூட்டுவதற்காகவும், உலகில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவதற்காகவும் அஹ்மதிய்யா ஜமாஅத் எத்துனை முக்கிய பங்கு ஆற்றுகின்றது என்ற உணர்வு என்னிடம் நிறைந்திருக்கின்றது.

லோஸ்கா நகரத்தின் ஜமாஅத் அல்லாத ஆசிரியர் ஒருவர் இருக்கின்றார். அவர் இவ்வாறு கூறுகின்றார்:

இன்று நாங்கள் உங்களின் கலீஃபாவிடமிருந்து ஒரு விஷயத்தை கற்றுக் கொண்டுள்ளோம். அது என்னவென்றால், இஸ்லாத்தில் பெண்களுக்கு கருத்துரிமைக்கான முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாம் திருமணம் தொடர்பாக தனது விருப்பத்தை தெரிவிப்பதற்கும் தனது துணையை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும் பெண்ணிற்கு உரிமை வழங்கியுள்ளது. ஆனால் சில சமூகங்களில் பலவந்தமாக திருமணங்கள் செய்து வைக்கப்படுகின்றன. மனித உரிமைகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இஸ்லாம் மட்டுமே பெண்களுக்கான உரிமையில் அழுத்தம் கொடுக்கும் மார்க்கமாக உள்ளது. எங்கு இஸ்லாம் ஆணிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட திருமணங்கள் செய்வதற்கு அனுமதி வழங்குகின்றதோ, அங்கு நீதியை நிலைநாட்டும்படியும், நீதியை கைவிட்டு விடக்கூடாது என்றும் ஆணிற்கு இஸ்லாம் வலியுறுத்திக் கூறியுள்ளது. நீதியுடன் நடக்க முடியவில்லையென்றால் பின்னர் ஒன்றுடன் நின்று கொள்ளுங்கள் என்றும் கூறியுள்ளது. இது மிக அழகிய இஸ்லாமிய போதனையாகும். அஹ்மதிய்யத் மட்டுமே இதன் கொடியை உயர்த்திப் பிடிக்கின்றது.

பின்னர் நைஜர் மண்டலத்தின் பேஸாவா என்ற பகுதியிலுள்ள மேமன் காலி சாஹிப் என்ற ஜமாஅத் அல்லாத நண்பர் ஒருவர் இவ்வாறு கூறுகின்றார்:

இது எனது முதலாவது சந்தர்ப்பம் ஆகும். மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இந்த உதாரணத்தை ஏனைய முஸ்லிம் பிரிவுகளும் பின்பற்றத் தொடங்கி விட்டால் பின்னர் நிச்சயமாக உலகில் முஸ்லிம்கள் முன்னேற்றங்களின் படித்தரங்களை கடந்து விடுவார்கள்.

அடுத்து நைஜரிலிருந்து உஸாமா சாஹிப் என்ற அஹ்மதி அல்லாத பொறியாளர் ஒருவர் இவ்வாறு கூறுகின்றார்:

எல்லாவற்றையும் விட இந்த விஷயம் தான் என்னை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கியது. இத்தனை அதிகமான நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பல தரப்பட்ட மொழி, கலாச்சாரம் வேறுபாட்டை கொண்ட நபர்கள் இருந்தபோதிலும் அவர்கள் அனைவரும் கட்டுப்படுதலின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். கொரோனா போன்ற உயிரை பறிக்கும் நோய்க்கு மத்தியிலும் இந்த அளவிற்கு Perfect ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது கண்கொள்ளா காட்சியாகும்.

அடுத்து நைஜர் நாட்டின் அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அஹ்மதி அல்லாத விருந்தினரான மர்யம் சாஹிபா கூறுகின்றார்கள்:

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் குத்பாவை கேட்ட பிறகு பெண்களுக்குரிய உரிமைகள் மற்றும் பெண்களின் பொறுப்புகள் ஆகிய இரண்டைக் குறித்தும் உண்மையான அறிவு எனக்கு கிடைத்துள்ளது. ஆஃப்ரிக்காவில் பெரும்பாலான பெண்கள் எவ்வளவு மோசமாக வாழ்க்கையை கழிக்கின்றனர் என்பது முன்னேற்றமடைந்த நாடுகளில் கற்பனை செய்து பார்ப்பது கடினமாகும். உங்களுடைய செயல் உங்களின் சொல்லிற்கு ஏற்புடையதாக உள்ளது. அஹ்மதிகளின் செயலும் அவர்களின் சொல்லும் ஒன்றாக உள்ளது. எனவே உங்களை விட சிறந்த மனிதர்களை நான் கண்டதில்லை.

எனவே இது வெறும் சொற்பொழிவு மட்டுமல்ல. மாறாக, ஒவ்வொரு அஹ்மதியும் தமது குடும்பங்களில் இந்த போதனைகளின் முன்னுதாரணங்களை காட்ட வேண்டும். அப்போது தான் இஸ்லாத்தின் இந்த உண்மையான போதனையால் மக்களுக்கு ஏற்பட்ட தாக்கம் நிலைபெறவும் முடியும்.

நைஜர் நாட்டின் அஹ்மதி அல்லாத ஃபரீத் மூஸா என்ற நண்பரும் பெண்களுக்கு வழங்கப்பட்ட சொற்பொழிவை பாராட்டியுள்ளார். அடுத்து அஹ்மதி அல்லாத பெண்மணியான மர்யம் இல்யாஸ் சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்: பெண்களின் உரிமைகள் தொடர்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் சாஹிப் அவர்கள் கூறியுள்ள விஷயங்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளாகும் என்பதை அறிந்து எனக்கு எனது பெண்களின் மீது பெருமிதம் ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்தை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டுமே! அவ்வாறு புரிந்து கொண்டால் இந்த உலகமே சொர்க்கமாக மாறி விடும்.

அடுத்து நஃபீஸா ஆத்மூ என்ற அஹ்மதி அல்லாத பெண்மணி நைஜர் நாட்டிலிருந்து இவ்வாறு கூறுகின்றார்:

முதல் முறையாக நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவை கேட்டேன். ஸய்யிதுனா ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் என்ன கண்ணியத்தையும், மரியாதையையும் பெண்களுக்கு வழங்கி இருந்தார்களோ அதனை இன்று உலகில் ஒருவர் முழுமையாக வழங்குகின்றார் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஆகும் என்ற விஷயம் எனக்கு பட்டப் பகலைப் போன்று தெளிவாக புலப்பட்டு விட்டது.

எனவே நான் மீண்டும் இதையே கூறுவேன். ஒவ்வொரு அஹ்மதி ஆணுக்கும் இது மிகவும் சிந்தக்க வேண்டிய தருணமாகும். குடும்பங்களில் தமது நடைமுறைகளை சரியாக வைத்துக் கொள்ளுங்கள். உலகை ஏமாற்றாதீர்கள்.

அமீர் சாஹிப் நைஜர் அவர்கள் எழுதுகின்றார்கள். அஹ்மதி அல்லாத நண்பரான அல்ஹாஜ் ஹுஸைன் சாஹிப் அவர்கள் தொழில் ரீதியில் வியாபாரியாக இருக்கின்றார்கள். மிகவும் மும்முரமாக இருப்பவர் ஆவார். எனினும் அவருக்கு ஜல்ஸாவிற்கு வருகை தரும்படி அழைப்பு கொடுக்கப்பட்டபோது அவர் அழைப்பை ஒப்புக் கொண்டார். ஜல்ஸாவிற்கு பிறகு அன்னார் இவ்வாறு கூறினார்:

ஏதோ உலகத் திருவிழாவாக இருக்கும் என்று எண்ணியே நான் சம்பிரதாய ரீதியாக நான் உங்களது ஜல்ஸாவிற்கு வந்திருந்தேன். ஆனால் நான் ஜல்ஸாவை கேட்க தொடங்கியபோது மூன்று நாட்களும் தொடர்ந்து வர வேண்டும் என்று எண்ணம் கொண்டு விட்டேன். என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கிய விஷயம் என்னவென்றால், அது ஜல்ஸாவின் சூழல் ஆகும். தன்னார்வ தொண்டர்கள் பணி செய்து

கொண்டிருந்ததை பார்த்தபோது அவர்களுக்கு தைரியம் வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு சக்தி அவர்களின் உள்ளங்களில் இருக்கின்றது என்பதை நான் கண்டேன். இல்லையென்றால் இது உலகியல் நபர்களின் ஆற்றலுக்கு உட்பட்ட விஷயமல்ல.

அடுத்து கினிகனாகரியின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்கள்: கன்டியா மண்டலத்தின் உள்ளூர் மிஷனரி இவ்வாறு கூறுகின்றார்:

பகுதியின் மேயருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கு எனக்கு உடல்நலம் சரியில்லை. ஆனால் எனது மகன் வருவார் என்று கூறினார்.

அவர் வந்தபோது பெண்களுக்கான எனது சொற்பொழிவு ஆரம்பமாக இருந்தது. அங்கு அதிகமாக மின்சார குறைபாடு உள்ளது. இன்றைய நாட்களில் மழை காலமாகவும் உள்ளது. மின்சாரம் சென்று விட்டால் பல மணி நேரம் மின்சாரம் வராது.

அவர் தொடர்ந்து கூறுகின்றார்: நிகழ்ச்சி ஆரம்பமானதும் மின்சாரம் தடைபட்டு விட்டது. விருந்தினரும் வந்த விட்டார். ஜெனரேட்டர் ஏதும் இருக்கவில்லை. மிஷனரி சாஹிப் கூறுகின்றார்: நாங்கள் துஆ செய்தோம். அல்லாஹ் ஜமாஅத்தின் உண்மைத்துவத்திற்காக இன்று அற்புதத்தை வெளிப்படுத்தட்டும் என்றும், மின்சாரம் வந்து விடட்டும் என்றும் நாங்கள் துஆ செய்தோம். நாங்கள் வேதனைமிகு உள்ளத்துடன் துஆ செய்தோம்.

நான் சொற்பொழிவிற்காக மேடைக்கு வந்திருக்கவில்லை. அந்நிலையில் மின்சாரம் வந்து விட்டது.

அவர்கள் கூறுகின்றனர்: காலத்தின் மஸீஹின் பணிவான அடிமைகளின் துஆக்களை அல்லாஹ் கேட்டு விட்டான். மேலும் இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கான அடையாளத்தையும் வெளிப்படுத்தினான். அது எங்களது விருந்தினரின் உள்ளத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மிகவும் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால், சொற்பொழிவு முடிந்த உடன் மின்சாரம் மீண்டும் தடைபட்டு விட்டது. நான் இவ்வளவு அழகிய சொற்பொழிவை ஒருபோதும் கேட்டதில்லை. ஜமாஅத்தைக் குறித்து ஏனைய முஸ்லிம்கள் எதனை பரவலாக கூறி வைத்துள்ளார்களோ அவை அனைத்தும் தவறாகும் என்று அவரும் கூறினார்.

கேமரூன் நாட்டிலிருந்து அங்குள்ள முஅல்லிம் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: கேமரூன் நாட்டின் வடக்குப் பகுதியில் Maroua என்ற ஒரு நகரத்திற்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தின் தலைவரான அல்ஹாஜி உஸ்மான் சாஹிப் இருக்கின்றார். அவர் அஹ்மதி அல்லாதவர் ஆவார். அன்னார் ஜல்ஸாவின்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

நிகழ்ச்சிகளை MTA Africa மூலம் பார்த்தார்.

இமாம் மஹ்தி வந்ததும் முழு உலகமும் அவரைக் கண்டு கொள்ளும் என்று நாங்கள் குழந்தைப் பருவம் முதல் கேட்டு வந்துள்ளோம். இந்த ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைப் பார்த்ததும் இந்த ஜமாஅத் உண்மையில் இமாம் மஹ்தியின் ஜமாஅத் ஆகும். முழு உலகமும் இந்த ஜமாஅத்தை பார்த்துக் கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது. பல்வேறு நாடுகளிலுள்ள மக்கள் தத்தமது நாடுகளிலிருந்து MTA மூலமாக ஜல்ஸாவில் கலந்து கொண்டனர். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமை பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருந்தனர். இன்று நான் இறை தூதரின் கூற்று முழுமையடைந்ததை கண்டு கொண்டேன் என்று அவர் கூறுகின்றார்.

மாலி நாட்டின் அமீர் சாஹிப் ஜல்ஸாவின் மூலமாக நிகழ்ந்த பைஅத்தை குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்: கேத்தியா நகரத்தின் ஆசிரியரான உமர் பாரி சாஹிப் தொலைபேசியில் அழைத்து இவ்வாறு கூறினார்கள்: நான் அஹ்மதி இல்லைதான். எனினும் நான் மட்டுமல்ல. வீட்டிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் மிகவும் ஆர்வத்துடன் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்டனர். குறிப்பாக காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவின் போது பல்வேறு முழக்கங்கள் இடப்பட்டன. அப்போது எங்களது வீட்டிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் மிகவும் உணர்வுப்பூர்வமாகி விட்டோம். நாங்களும் அதே முழக்கத்தை கூறிக் கொண்டிருந்தோம். இன்ஷா அல்லாஹ் நாங்கள் விரைவாக அஹ்மதிய்யா மிஷனிற்கு வருகை தந்து எனது குடும்பத்துடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விடுவோம் என்று உமர் பாரி சாஹிப் அவர்கள் கூறினார்கள்.

முபல்லிக் இன்சார்ஜ் கேமரூன் இவ்வாறு கூறுகின்றார்கள்: கேமரூன் நாட்டிலிருந்து தலைமை இமாம் Douala ஃபாரூக் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்:

நான் MTA Africa மூலமாக ஜல்ஸாவின் சொற்பொழிவுகளை கேட்டேன். எந்த மக்கள் ஜமாஅத்தை காஃபிர் என்றும், தீவிரவாத அமைப்பு என்றும் கூறுகின்றார்களோ அவர்களுக்கு பதிலாக காத்தமுன் நபிய்யீன் (ஸல்) என்ற வசனம் பெரிய எழுத்துக்களில் எழுதி மேடையின் சுவரில் வைக்கப்பட்டிருந்தது. இப்போது இன்ஷா அல்லாஹ் MTA மூலமாக ஜமாஅத்தைப் பற்றிய பெரும்பாலான தவறான புரிதல்கள் நீங்கி விடும்.

அமீர் சாஹிப் தன்ஸானிய்யா அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அரூஷா மண்டலத்தின் அஹ்மதி அல்லாத பெண்மணியான Jabu சாஹிபா என்ற பெண்மணி இவ்வாறு கூறினார்:

நான் ஆண்டு மாநாட்டை பார்த்தது இதுவே முதல் முறையாகும். இவ்வளவு அமைதி நிறைந்த கூட்டத்தை நான் எனது வாழ்க்கையில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

கண்டதில்லை. பொதுவாக மாநாடுகளில் மக்கள் கூச்சலிடுவர். மேலும் மக்களை ஆரவாரம் மூட்ட பலதரப்பட்ட நகைச்சுவைக்குரிய நிகழ்ச்சிகள் நடத்துவர். ஆனால் இந்த ஜல்ஸாவில் அதுபோன்று எதுவும் இல்லை. மாறாக, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் குறித்து கூறப்பட்டு வந்தன. சந்தேகத்திற்கிடமின்றி தமது கலீஃபாவின் மீது அஹ்மதிகளுக்கு இருக்கும் நேசத்திற்கான உதாரணம் உலகில் எங்கும் கிடைக்க முடியாது.

அடுத்து கேமரூன் நாட்டின் Maroua நகரத்தின் உள்ளூர் தலைவர் ஒருவர் மாநாட்டு நிகழ்ச்சிகளை பார்த்து விட்டு இவ்வாறு கூறுகின்றார்: இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிறப்பாகும். இவ்வளவு அதிகமான மொழிகளில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. மக்கள் இதிலிருந்து பயனடைந்து வருகின்றனர். நான் ஜல்ஸாவிலிருந்து பயன் பெற்றேன். மேலும் எனது அறிவும் அதிகரித்துள்ளது. MTA ஓர் அருளாகும். நான் இனி Cable Connection வைத்துக் கொள்வேன். நான் எனது வீட்டில் அமர்ந்து கொண்டு MTA விலிருந்து பயன் பெற்று வருவேன். மேலும் எனது அறிவையும் அதிகரித்துக் கொள்வேன்.

தற்போது அன்னியர்களும் MTA விலிருந்து தாக்கம் பெற்று வருகின்றனர். ஆன்மீக மார்க்க விருந்திலிருந்து பயன் பெற விரும்புபவர்கள் இதிலிருந்து பயன் பெறுகின்றனர். இது ஒன்றே முன்னேற்றத்தின் ரகசியம் ஆகும். ஆன்மீக ரீதியில் முன்னேற்றம் பெற வேண்டுமென்றால் MTA வின் பக்கம் அஹ்மதிகளும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

Gabon நகரத்து முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் இவ்வாறு எழுதுகின்றார்: ஒரு புதிய அஹ்மதி இவ்வாறு கூறினார்:

உண்மையில் இது உலகளாவிய ஜல்ஸா ஆகும். அதில் நாங்களும் கலந்து கொண்டுள்ளோம். மேலும் ஏனைய நாடுகளிலிருந்தும் மக்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்த விஷயமும் எங்களது ஈமானை உறுதிப்படுத்துகின்றது. கால நேரத்தில் வித்தியாசம் இருந்தபோதிலும் முழு உலகில் மக்கள் ஜல்ஸாவில் அமர்ந்திருந்தனர். அஹ்மதிய்யத் மட்டுமே இந்த காட்சிகளை முன் வைக்க முடியும். மற்ற முஸ்லிம்களுக்கு இது சாத்தியமே அல்ல.

ஸேம்பியா நாட்டின் கிழக்கு மாநிலத்தின் Lusangazi நகரத்தை சார்ந்த புதிய அஹ்மதி அலி சாஹிப் அவர்கள் தமது பகுதியின் Head Man ஆவார்கள். அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நாங்கள் கிறிஸ்துவத்திலிருந்து அஹ்மதிய்யத்திற்கு வந்துள்ளோம். எங்களது கிராமத்தில் பிப்ரவரி மாதம் 2021 ஆம் ஆண்டு முறையாக ஜமாஅத் உருவானது. அதன் பிறகு பல முறை அஹ்மதி அல்லாத ஆலிம்கள் எங்களது பகுதிக்கு வந்தனர். எங்களது உள்ளங்களில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

அஹ்மதிய்யத்திற்கு எதிராக பல்வேறு வகையான சந்தேகங்களையும், ஆட்சேபனைகளையும் உருவாக்குவதற்கு முயற்சிகள் செய்தனர். நான் கிறிஸ்துவராக இருந்த வரை எவரும் எங்களை விசாரிக்க வரவில்லை. அஹ்மதியான பிறகு அஹ்மதி அல்லாத ஆலிம்கள் அவர்களின் மார்க்கத்தை சரி செய்வதற்காக வந்தடைந்தனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: தற்போது எங்களுக்கு யூ.கே ஜல்ஸாவை நேரடியாக பார்ப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. நாங்கள் எங்களது வாழ்க்கையில் முதல் முறையாக சீரான ஜல்ஸாவின் காட்சியை கண்டோம். தொற்று நோய்க்கான சூழல் இருந்தபோதிலும் இத்தனை பெரிய எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர். பல்வேறு நாடுகளின் அரசாங்க பிரதிநிதிகளும் வீடியோவில் தமது தூதுச் செய்திகளை அனுப்பினர். அல்லாஹ்வின் அருளால் ஜல்ஸாவை பார்த்த பிறகு எங்களது அனைத்து சந்தேகங்களும் நீங்கி விட்டன. அஹ்மதிய்யத் என்பது ஒரு சிறு பிரிவின் பெயரல்ல. மாறாக, அது ஓர் உலகளாவிய ஜமாஅத் ஆகும். காலத்தின் கலீஃபா பெண்கள் மற்றும் ஏனைய மக்களின் உரிமைகளைக் குறித்து இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைத்ததைக் கேட்டு நாங்கள் ஆச்சரியத்தில் உறைந்துள்ளோம். பெண்களுக்கும் உரிமைகள் உள்ளனவா? என்று நாங்கள் ஆச்சரியம் அடைந்துள்ளோம். ஏனென்றால் நாங்கள் எங்களது பெண்களை ஒரு பொருட்டாகவே கருதியதில்லை. இன்ஷா அல்லாஹ் நாங்கள் இங்கு கண்டவற்றை, கேட்டவற்றை திரும்பிச் சென்று மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவோம். ஏனென்றால் அதன் மூலம் அவர்களின் நம்பிக்கையும் பலம் பெறும். மேலும் அவர்களும் அதன்படி செயல்பட முயற்சி செய்வார்கள்.

அடுத்து மலேஷியாவிலிருந்து Rusli Bin Mappasulle என்ற புதிய அஹ்மதி ஒருவர் கூறுகின்றார்:

யூ.கே ஜல்ஸா ஸாலானாவைப் பார்த்து நான் மிகவும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றேன். அல்லாஹ் எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கும், காலத்தின் இமாமை அடையாளம் காண்பதற்கும் நற்பேறு வழங்கியுள்ளான். நான் யூ.கே–வில் வசித்திருக்கவில்லை. எனினும் எனக்கு காலத்தின் கலீஃபாவை பார்ப்பதற்கும், அன்னாரின் சொற்பொழிவை கேட்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்து வந்தது. நான் ஜமாஅத்தில் இணையாமல் இருந்திருந்தால் இந்த அருட்களிலிருந்து நான் இழப்பிற்குரியவனாக ஆகி இருப்பேன். நான் வாக்குறுதி செய்கின்றேன். நான் கிலாஃபத்துடன் எப்போதும் நன்றியுணர்வுடனும், கட்டுப்பட்டவனாகவும் இருப்பேன்.

பிரேஸிலைச் சேர்ந்த Priscila Marleme என்ற பெண்மணி சில மாதங்களுக்கு முன்னர் பைஅத் செய்திருந்தார். அன்னார் கூறுகின்றார்: எனக்கு முதன் முறையாக ஜல்ஸா ஸாலானா பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இது எனது நற்பேறு ஆகும். மொழி அறியாதபோதிலும் எனக்கு ஏராளமான விஷயங்களை கற்பதற்கும், அறிந்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். அவன் எனக்கு அஹ்மதிய்யதை ஒப்புக் கொள்ளும் நற்பேறை வழங்கியுள்ளான்.

கினிபஸாவ் நாட்டின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: கினிபஸாவ் ஜமாஅத்திலிருந்து மிகத் தொலைவிலுள்ள கஸீனீ என்ற ஊரைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த நான்கு லஜ்னாக்கள் 8 கி.மீ நடை பயணமாக தங்களுக்கு அருகிலுள்ள மஸ்ரா என்ற ஜமாஅத்தில் ஜல்ஸா ஸாலானா யூ.கே–வின் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு சென்றார்கள். எனது சொற்பொழிவை அவர்கள் கேட்டபோது அல்லாஹ்வின் அருளால் நாங்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் எவ்வளவு பெரிய அருட்கொடையிலிருந்து இதுவரை விலகி இருந்தோம் என்ற உணர்வு கலீஃபாவின் சொற்பொழிவை கேட்ட பிறகு ஏற்பட்டது. அஹ்மதிய்யத்தின் மீது எங்களது ஈமான் இன்று 100 சதவீதம் முழுமை பெற்று விட்டது. நாங்கள் எப்போதும் காலத்தின் கலீஃபாவின் குத்பாவை கேட்பதற்காக வந்து செல்வோம் என்று நாங்கள் உடன்படிக்கை எடுத்துக் கொண்டோம்.

எப்படிப்பட்ட மாற்றங்களை அல்லாஹ் உருவாக்குகின்றான் என்று பாருங்கள்.

கயானாவிலிருந்தும் Live Stream மூலமாக மக்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டனர். முஸஃப்பர் கியூஸி என்ற ஒரு புதிய அஹ்மதி இவ்வாறு கூறுகின்றார்: இது எனது முதலாவது ஆண்டு மாநாடாக இருந்தது. இந்த அனுபவம் எனக்கு மிகச் சிறந்ததாக இருந்தது. குறிப்பாக நான் எனது அஹ்மதி சகோதரர்களுடன் இணைந்து ஜல்ஸாவை பார்த்தேன். காலத்தின் கலீஃபாவை பார்த்தேன். அன்னாரின் சொற்பொழிவை கேட்டேன். இவை அனைத்தும் எனக்கு மிகச்சிறந்த அனுபவமாக இருந்தது. இதற்கு முன்பு நான் ஒருபோதும் வேறு எந்த முஸ்லிம் பெண்மணியையும் இவ்வளவு அழகாக திலாவத் செய்து பார்த்ததில்லை. திலாவத்தையும் அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

பின்னர் கூறுகின்றார்கள்: எங்களது ஜமாஅத்தில் உறுப்பினர்கள் பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களிலிருந்து ஜல்ஸா கேட்பதற்காக ஓரிடத்தில் ஒன்று கூடினார்கள். இவை அனைத்தும் கிலாஃபத் மற்றும் அஹ்மதிய்யத்தின் பரகத்துகள் ஆகும். அல்லாஹ் இந்த பரகத்துகளை இந்த ஜமாஅத்திற்கு அருளியுள்ளான். இவ்வாறு உலகின் பல்வேறு நாடுகளின் ஜமாஅத்துகள் ஜல்ஸா ஸாலாவில் ஒன்றாக அமர்ந்து காணொளி மூலமாக கலந்து கொள்வதை பார்ப்பது மிகவும் சிறப்பானதாக இருந்தது. ஏராளமான எப்படிப்பட்ட நாடுகளை நான் கண்டேன் என்றால் அங்கு ஜமாஅத் சென்றடைந்து விட்டது என்பதைப் பற்றி நான் அறியாமல் இருந்தேன். இதேபோன்று ஜமாஅத் உறுப்பினர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து ஜல்ஸாவிற்கு பணி செய்கின்றனர் என்பதையும் கண்டேன். யூ.கே–வில் வங்கியில் பணி செய்யக்கூடிய ஒரு சகோதரர் பணியிலிருந்து விடுமுறை பெற்றுக் கொண்டு ஜல்ஸாவிற்காக தன்னார்வ தொண்டராக பணி செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் தனது காரிலேயே தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அனைத்து விஷயங்களும் ஜமாஅத்தின் மக்களிடத்தில் கலப்பற்றதன்மை உள்ளது என்பதையும், அவர்கள் தியாகங்கள் செய்கின்றனர் என்பதையும் நிரூபணம் செய்கின்றன. சொற்பொழிவுகளிலிருந்து உரிமைகளைப் பற்றி எனக்கு தெரிய வந்தது. இவ்வாறு அன்னார் தனது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

மொரிஷியஸ் நாட்டிலிருந்து ஸஃப்பான் நாயிக் சாஹிப் என்ற ஒரு புதிய அஹ்மதி இவ்வாறு கூறுகின்றார்: Live Streaming மூலமாக ஜல்ஸாவில் கலந்து கொள்வது முதல் அனுபவமாக இருந்தது. நிச்சயமாக இவ்வாறு கலந்து கொள்வது என்னை மிக அதிகமாக கிலாஃபத்திற்கு அருகில் கொண்டு சேர்த்தது. காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு சொல்லும் எனது உள்ளத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. ஜமாஅத்தில் இணையக்கூடிய முடிவின் மூலமாக நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். MTA நிகழ்ச்சிகளிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் குறித்து ஏராளமான விஷயங்களை கற்று வருகின்றேன்.

ஆஸ்திரேலியாவிலிருந்து அஷ்ரஃப் ஸியா சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: Donatella சாஹிபா என்பவர் இந்த வருடத்தின் துவக்கத்தில் பைஅத் செய்தார்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்: காலத்தின் கலீஃபா கூறிய விஷயங்கள் அனைத்தும் உணர்வூட்டக்கூடியதாக இருந்தன. அன்னாரின் சொற்பொழிவுகளின்போது நான் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தேன். உண்மையில் இஸ்லாம் வாழ்வளிக்கக்கூடிய மற்றும் உண்மையான வழிப்பாதையாகும். எனது வாழ்க்கை கொஞ்சம் கொஞ்சமாக முற்றிலும் மாறி வருகின்றது. அல்லாஹ் எனக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறை வழங்கியதற்கு நான் அவனுக்கு மிகவும் நன்றி செலுத்துகின்றேன். இந்தப் பெண்மணி ஆஸ்திரேலியன் ஆவார்.

ஜல்ஸாவில் கலந்து கொண்டதற்கு பிறகு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட சம்பவங்களும் நிறைய உள்ளன. ஐவெரிகோஸ்ட் நாட்டிலிருந்து அஹ்மதி அல்லாத நண்பரான ஹஸன் சாஹிப் கூறுகின்றார்:

ஜல்ஸாவின் மூன்று நாட்களின் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மிகவும் ஈமானை வலுவூட்டக்கூடியதாக இருந்தது. பொய்க்கு நீண்ட ஆயுள் கிடையாது. அது தானே மரணித்து விடுகின்றது. ஆனால் உண்மை எப்போதும் நிலைபெற்றிருக்கின்றது. இதே விதிமுறைக்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அனுதினம் முன்னேற்றம் அடைவது அதன் உண்மைத்துவத்திற்கு சான்றாகும்.

அன்னார் கூறுகின்றார்: ஜல்ஸா முடிவடைந்த பிறகு சில நண்பர்கள் ஒரு உணவகத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். ஒரு அன்னியர் எங்களது விஷயங்களை கேட்டு விட்டு கூறினார்: இன்று இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி அமல் செய்யக்கூடிய ஒரு ஜமாஅத் உள்ளது என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஆகும். இவ்வாறு கூறிவிட்டு அந்த நபர் சென்று விட்டார். ஆனால் எங்களது

கூற்றுகளை உண்மைப்படுத்தி விட்டு சென்றார். அஹ்மதிய்யத் சொல் அளவில் மட்டுமல்ல. மாறாக, செயல் அளவிலும் உண்மையான இஸ்லாத்தின்படி அமல் செய்கின்றது. இதனை அந்த நபரும் உண்மைப்படுத்தி விட்டு சென்று விட்டார்.

இதன் பிறகு ஹஸன் சாஹிப் நமது முஅல்லிம் சாஹிபை சந்தித்தார்கள். மேலும் நான் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைய விரும்புகின்றேன். இனி நான் அதிக நேரம் உண்மையிலிருந்து இழப்பிற்குரியவராக என்னை ஆக்கிக் கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

கான்கோ பிரேஸில் நாட்டின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் கூறுகின்றார்கள்: Gamboma என்ற ஜமாஅத்தில் மூன்று நாட்கள் TV மற்றும் Radio வில் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளையும் நேரடியாக காட்டுவதற்கு நற்பேறு கிடைத்து. இந்த பகுதியில் ஒரே ஒரு TV Station மட்டுமே உள்ளது. அதில் நமது ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. ஒரு கணக்கின் அடிப்படையில் சுமார் 4000 நபர்கள் ஜல்ஸா பார்த்திருப்பார்கள். மேலும் ஜல்ஸாவை கேட்டிருப்பார்கள். Gamboma–வின் சுற்று புறத்திலுள்ள 30 கிராமத்தின் ஜமாஅத்துகளும் Radio மூலமாக ஜல்ஸாவில் பங்கு கொண்டது. இந்த பகுதியில் மின்சார வசதி இல்லை. எனவே மக்கள் Radio மூலமாக கேட்டனர்.

பின்னர் அவர்கள் கூறுகிறார்கள்: எனது குத்பாக்கள் அனைத்தும் Lingala என்ற உள்ளூர் மொழியில் அங்கு மொழியாக்கம் செய்யப்பட்டு வந்தது. அதனை அவர்கள் கேட்டனர். அல்ஹம்துலில்லாஹ் நிகழ்ச்சி மிகவும் வெற்றிகரமாக இருந்தது எனவும், அதனை நம்மவர்களும், அன்னியர்களும் அனைவரும் வெளிப்படுத்தினர் என்றும் அன்னார் கூறுகின்றார்கள். மூன்று நாட்கள் எல்லா பக்கமும் ஜல்ஸாவின் சூழலாக இருந்தது. அதேபோன்று உணவுக்கான ஏற்பாடும் ஜல்ஸாவில் செய்யப்படுவதைப் போன்று செய்யப்பட்டிருந்தது. ஜல்ஸாவின்போது அல்லாஹ்வின் அருளால் 12 நபர்கள் பைஅத் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணையும் நற்பேறு பெற்றார்கள்.

கினிபஸாவின் முபல்லிக் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் பெரும்பாலான புதிய அஹ்மதிகள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு தற்போது தமது பகுதிகளிலும் தமது அன்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் மிக அதிகமாக தப்லீக் செய்கின்றனர். ஜல்ஸா ஸாலானா யூ.கே–வின் அருளுக்குரிய சந்தர்ப்பத்தில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை பார்க்க வேண்டும் என்று கூறப்பட்டபோது அனைத்து புதிய அஹ்மதிகளும் தமது அஹ்மதி அல்லாத அன்பர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் ஜல்ஸாவிற்கு அழைத்தார்கள். அதிலும் எனது மூன்று, நான்கு சொற்பொழிவுகளுக்கான நேரத்தில் அதனை கேட்பதற்காக குறிப்பாக அழைத்திருந்தனர். மக்கள் 30 கி.மீ பயணம் செய்து சைக்கிள் அல்லது நடைபயணமாக அங்கு வந்தடைந்தனர். பெரும்பாலான மக்கள் முதல் நாள் சொற்பொழிவை கேட்பதற்கே வந்திருந்தனர். ஆனால் எனது முதல் நாள் சொற்பொழிவை கேட்டபோது அவர்களின் எண்ணம் மாறி இருந்தது. அவர்கள் 3 நாட்களும் தங்குவதற்கு எண்ணம் கொண்டார்கள். மூன்றாவது நாள் எனது நிறைவுரையை கேட்ட பிறகு உங்களது கலீஃபா எங்களது உள்ளங்களை வெற்றி கொண்டு விட்டார்கள். மேலும் அன்னார் எடுத்து வைத்த இஸ்லாம் தான் உண்மையான இஸ்லாம் என்று அந்த மக்கள் கூறத் தொடங்கி விட்டனர் இந்த சந்தர்ப்பத்தில் 127 நபர்களும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். இதில் ஆண்கள், பெண்கள் இருவரும் அடங்குவர். ஆக இவ்வாறு ஒட்டுமொத்த அளவிலும் பைஅத் நடந்துள்ளது.

கோங்கோவிலிருந்து இப்ராஹீம் சாஹிப் என்ற முஅல்லிம் கூறுகின்றார்: Mouk Ngantsibi என்ற கிருஸ்துவ நண்பர் ஒருவர் ஜல்ஸாவை பார்ப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவர் தனது மனைவியுடன் ஜல்ஸாவில் கலந்து கொண்டார். ஜல்ஸாவை பார்த்த பிறகு அவர் தனது மனைவியிடம் கூறினார்: இது போன்ற போதனைகளும், வழிகாட்டல்களும் நமக்கு எங்கும் கிடைக்காது என்றே எனக்கு தோன்றுகிறது. நாம் நமது வாழ்க்கையின் ஒரு நீண்ட பகுதியை கிருஸ்துவத்தில் வீணடித்து விட்டோம். மூன்று நாட்கள் நாம் இங்கு தங்கியிருந்து கற்றுக் கொண்ட விஷயங்களை கிருஸ்துவத்தில் தங்கி முழு வாழ்நாளிலும் கற்றுக் கொள்ள முடியவில்லை. நாம் இவர்களுடன் இணைந்து கொள்வது தான் தற்போது நமக்கு நன்மையாக உள்ளது என்றும் அந்த நபர் கூறினார். இவ்வாறு மனைவியும், கணவரும், பிள்ளைகளும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டனர்.

கினிபஸாவின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் இவ்வாறு எழுதுகின்றார்கள்: கினிபஸாவினுடைய பாவுனா மண்டலத்தைச் சேர்ந்த அஹ்மதி அல்லாத நண்பரான கம்பாஜாவ் சாஹிப் யூ.கே ஜல்ஸாவின் மூன்று நாள் நிகழ்ச்சிகளை கேட்டார்கள். எனது குத்பாக்களையும் கேட்டார்கள். பின்னர் இவ்வாறு கூறினார்கள்: இஸ்லாத்திற்கு தற்போது ஒரு தலைவரின் அவசியம் உள்ளது. அந்த தலைவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் உள்ளார். கலீஃபா என்ற வடிவில் இருக்கின்றார். அவரின் தலைமையின் கீழ் முழு இஸ்லாமிய உலகமும் ஒன்றுகூட முடியும் என்று கூறினார். இவ்வாறு ஜல்ஸா நிறைவடைந்தவுடன் அன்னார் அப்போதே பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டார்.

கான்கோ பிரேஸிலிருந்து அங்குதானி என்ற ஒரு கிருஸ்துவ நண்பர் இவ்வாறு கூறுகின்றார்: நான் ஒருபோதும் எந்தவொரு மார்க்கத்திலும் ஆர்வம் கொண்டதில்லை. ஏனென்றால் மார்க்கவாதிகள் கலப்பற்றவர்களாக இருப்பதில்லை என்று கிருஸ்துவ மார்க்கத்தை பார்த்து புரிந்து வைத்திருந்தேன். எனது சகோதரர் ஏற்கனவே ஜமாஅத்தில் இணைந்திருந்தார். ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு அவர் எனக்கு அழைப்பு கொடுத்தார். அவர் கூறியதால் நான் வந்து விட்டேன். ஆனால் ஜல்ஸாவை நான் மெல்ல மெல்ல பார்த்துக் கொண்டு சென்றபோது என்னிடத்தில் மாற்றங்கள் உருவாக தொடங்கி விட்டன. மார்க்கத்தின் மீது எனக்கு ஆர்வம் உண்டாகத் தொடங்கியது. கலீஃபாவின் சொற்பொழிவை கேட்ட பிறகு மார்க்கம் ஓர் உண்மையாகும் என்று முதல் முறை எனது உள்ளம் சான்று பகர்ந்தது. உண்மையான மார்க்கத்தில் உள்ளங்களை மாற்றுவதற்கு வலிமை உள்ளது. நான் வாழ்க்கையில் முதல் முறையாக மார்க்கம் என்ற ரீதியில் அஹ்மதிய்யத் இஸ்லாத்தை ஒப்புக் கொள்கின்றேன்.

நைஜீரியாவின் ஓர் அஹ்மதி அல்லாத நண்பர் ஜல்ஸாவை கேட்டு பைஅத் செய்யும் நற்பேறு பெற்றுள்ளார். அன்னார் இவ்வாறு கூறுகின்றார்:

நான் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளைக் கண்டு மிகுந்த தாக்கம் அடைந்துள்ளேன். நான் எந்த உண்மையை தேடிக் கொண்டிருந்தேனோ அது எனக்கு கிடைத்து விட்டது. நான் தற்போது பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று அவர் கூறுகின்றார்.

செனிகால் நாட்டிலிருந்து ஜஃபர் இக்பால் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஜல்ஸாவின் மூன்று நாட்களில் நான் ஆற்றிய சொற்பொழிவுகள் அம்பவர் மண்டலத்தில் நான்கு ரேடியோக்களிலும், ஒரு தொலைக்காட்சியிலும் நேரடியாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. ஒரு வானொலி நெறியாளர் இந்த சொற்பொழிவுகளை கேட்டு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டுள்ளார். அந்த நெறியாளர் மிகவும் கல்வி அறிவு படைத்தவர் ஆவார். மேலும் மக்களில் மிகவும் பிரபல்யமானவர் ஆவார். நான் ஜமாஅத்தை குறித்து நிறைய விஷயங்களை கேட்டுள்ளேன். ஆனால் ஜமாஅத்தின் இமாமின் கூற்றை இன்று கேட்டு விட்டு எனக்கு உண்மை தெரிய வந்துள்ளது. எனவே நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்றேன் என்று அவர் கூறுகின்றார். அதே நாளில் அவர் தமது குடும்பத்துடன் பைஅத்தும் செய்து விட்டார்.

கேமரூன் நாட்டின் மர்வா நகரத்தில் ஒரு

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)


### நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

**1800 103 2131**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

உள்ளூர் இமாம் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

ஜல்ஸாவின் சிறப்பு என்னவென்றால், அதில் ஜமாஅத்தின் இமாம் ஆற்றிய சொற்பொழிவுகள் ஆகும். ஜமாஅத்தின் கலீஃபா திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியிலிருந்து ஒவ்வொரு விஷயத்தையும் பேசுகின்றார். மேலும் அது எனது உள்ளத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நிச்சயமாக இந்த ஜமாஅத்தும் கலீஃபாவும் இறைவன் புறமிருந்தே வந்துள்ளனர். எனக்கு மன நிறைவு ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார். இவ்வாறு அவர் தனது நண்பர்களுடன் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். நீதியின் பார்வையுடன் பார்க்கக்கூடிய நபர்கள் அல்லாஹ்வின் அருளால் ஆலிம்களிலும் உள்ளனர். மேலும் ஒப்புக் கொள்கின்றனர்.

மாலியில் ஜமாஅத்தைச் சாராத நபர்கள் ஜல்ஸாவை பார்த்த பிறகு ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். ஜல்ஸாவிற்கு முன்பு ஜமாஅத் ரேடியோவில் ஜல்ஸாவை பற்றிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஜல்ஸாவைக் குறித்து ரேடியோவில் தினமும் அறிவிப்புகளும் ஒலிபரப்பப்பட்டன. அவர்கள் கூறுகின்றார்கள்:

நாங்கள் அனைவரையும் ஜல்ஸாவை காண்பதற்காக மிஷனிற்கு வருமாறு அழைத்திருந்தோம். எனவே ஜல்ஸாவின் நாட்களில் அஹ்மதி உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் ஜமாஅத்தை சாராத நபர்களும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை காண்பதற்கு வந்தனர். ஜல்ஸாவின் கடைசி நாளில் நான்கு நபர்கள் பைஅத் செய்து ஜமாத்தில் இணைந்து விட்டனர். இந்த நபர்கள் கல்வி அறிவு படைத்த மக்களாவர்.

அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: நாங்கள் நீண்ட காலமாக காயி நகரத்தில் ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தோம். மேலும் எங்களுக்கு அஹ்மதிய்யத்தின் மீது ஆர்வம் இருந்தது. ரேடியோவில் ஜல்ஸா தொடர்பாக கேட்டபோது இவர்களின் ஜல்ஸாவை நிச்சயம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு தோன்றியது. ஜல்ஸாவை பார்த்த பிறகு அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்: இஸ்லாத்தின் வெற்றியும், முன்னேற்றமும் அஹ்மதிய்யத்துடன் மட்டுமே இணைந்துள்ளது. அஹ்மதிய்யத் எந்த இஸ்லாத்தை உலகிற்கு முன் எடுத்து வைக்கின்றதோ அதுவே அசல் மற்றும் உண்மையான இஸ்லாம் ஆகும். மாபெரும் விஷயம் என்னவென்றால், முஸ்லிம்களுக்கு ஒரு கலீஃபாவின் அவசியம் உள்ளது. அவர்களுக்கு வழிகாட்ட ஒரு கலீஃபாவின் தேவை உள்ளது. தற்போதைய காலத்தில் இஸ்லாத்தில் கிலாஃபத் அஹ்மதிய்யத் மூலமாக நிலைபெற்றுள்ளது. தற்போது நாங்கள் உறுதியான அஹ்மதிகள் ஆவோம். மாதத்தில் ஒரு முறை கொடுக்க வேண்டிய சந்தாவைக் குறித்து எங்களுக்கு கூறுங்கள். நாங்கள் ஒவ்வொரு மாதமும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக சந்தாவும் கொடுப்போம்.

மாலி நாட்டின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: தாயி மண்டலத்தின் மிஷன் ஹவுஸில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்காக ஜமாஅத் அல்லாத நபர்களும் வந்தனர். ஜல்ஸாவின் மூன்றாவது நாளன்று ஈமானை வலுவூட்டக்கூடிய காட்சிகளை உள்ளடக்கிய பழைய ஆவணப் படம் ஒன்று காட்டப்பட்டபோது கல்வியறிவு படைத்த ஜமாஅத் அல்லாத நபர்கள் இந்த கேள்வியை கேட்டனர். அதாவது பைஅத் செய்வதற்கு என்ன நிபந்தனைகள் உள்ளன? இடைவேளையின்போது அனைத்து நபர்களுக்கும் முஅல்லிம் சாஹிப் அவர்கள் பைஅத் நிபந்தனைகளை உள்ளூர் மொழிகளில் மொழியாக்கம் செய்து வாசித்துக் காட்டினார்கள். அப்போது இது இஸ்லாத்தின் சுருக்கம் ஆகும். இதில் சமூக வாழ்க்கையை கழிப்பது தொடர்பாக அழகிய வழிகாட்டல் உள்ளன என்றும் அவர் கூறினார். இதன்படி அமல் செய்வது ஒவ்வொருவருக்கும் மிக அவசியமாகும் என்றும் கூறினார். ஆக ஜஸ்லாவிற்கு பிறகு அவர் பைஅத் செய்து விட்டார்.

கானாவிலிருந்து Live Stream மூலமாக மக்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்தனர். புஸ்தானே அஹ்மத் இக்ராவின் பசுமையான வளாகத்தில் ஜல்ஸாவை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சூழல் மிகவும் நல்லதாக இருந்தது. இரண்டு இடங்களில் இரண்டு பெரிய திரையில் சகோதரர்களும், சகோதரிகளும் நேரடியாக ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டிருந்தனர். மூன்று நாட்களில் 2500–ஐ விட அதிகமான ஆண்களும், பெண்களும் ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்தனர். Central Ahmadiyya–வின் கமாஸி பள்ளிவாசலில் மிகப்பெரிய அளவில் ஜல்ஸாவை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு மூன்று நாட்களில் 2000–ற்கும் கூடுதலான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். அபர்வெஸ்ட் நகரத்தின் வா நகரத்தில் 12 பள்ளிவாசலில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்பதற்கு ஜமாஅத் அளவிலான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மற்ற ஏனைய மண்டலங்களில் 14 இடங்கள் அமைந்திருந்தன. இவ்வாறு இங்கும் 2000–ற்கும் கூடுதலான மக்கள் கூட்டாக ஜல்ஸாவை கேட்டனர். பின்னர் இதேபோன்று மற்ற அனைத்து மண்டலங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மற்ற சேனல்கள் மூலமாகவும் அவர்கள் MTA பார்த்து வந்தனர். MTA Africa மற்றும் MTA Gana மட்டுமின்றி கானாவின் ஏனைய மூன்று TV சேனல்களிலும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் பார்க்கப்பட்டன.

யமன் நாட்டிலிருந்து அக்ரம் அலல் கஹலானி சாஹிப் கூறுகின்றார்கள்: இன்று காலத்தின் கலீஃபா அவர்கள் இந்த ஜல்ஸா மற்றும் சொற்பொழிவுகள் மூலமாக எங்களது உள்ளங்களிலும், ஆன்மாவிலும் புதிய உயிரை ஊட்டி விட்டார்கள். எங்களது கண்களிலிருந்து கண்ணீர் வற்றி விட்டன. அவை தற்போது திரும்பி வந்துள்ளனர். உள்ளம் கடினமான பிறகு தற்போது மென்மையாகி விட்டது. காலத்தின் கலீஃபாவின் லஜ்னா சொற்பொழிவை அனைத்து சமுதாயமும் கேட்டு அதன்படி செயல்பட்டால் பின்னர் முழு சமூகமும் 100% சீராகி விடும். அதேபோன்று நிறைவுரை ஜல்ஸாவின் அனைத்து ஏற்பாடுகளையும் ஒளிமயமாக்கி விட்டது. உலகில் இந்த அனைத்து ஏற்பாட்டிற்கும் நிகரான முன்னுதாரணம் கிடைக்க முடியாது. அனைத்து முகங்களிலும் சிரிப்பும், புன்னகையும் காணக் கிடைத்தன. இது இறைவனின் அருளாகும். அவனே இந்த ஜமாஅத்தை உருவாக்கியுள்ளான்.

யமன் நாட்டிலிருந்து ஆமிர் அலி சாஹிப் கூறுகின்றார்கள்: ஜல்ஸாவின் மூன்று நாட்களும் எங்களுக்கு பெருநாளாக இருந்தன. அதில் நாங்கள் இறைவனின் அருட்கள் இறங்குவதையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்யப்பட்ட வாக்குறுதிகள் நிறைவடைந்ததையும் கண்டோம். ஜல்ஸாவின் மூலமாக அஹ்மதிய்யா கிலாஃபத் மீதான எங்களது ஈமான் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஏனென்றால் அல்லாஹ்வின் உதவிகள் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் எவ்வாறு இணைந்திருக்கின்றன? என்பதை நாங்கள் கண்டு விட்டோம். கிலாஃபத்தை தவிர்த்து மற்ற அனைத்தும் இருளைத் தவிர வேறொன்றுமில்லை. ஜல்ஸாவில் நாங்கள் பௌதீக ரீதியாக அதாவது நேரடியாக பங்குபெறவில்லைதான். எனினும் எங்களது உள்ளங்கள் உங்களுடன் இருந்தன. நாங்கள் ஜல்ஸாவின் தூய ஆன்மீக சூழலை உணர்ந்து கொண்டிருந்தோம். ஒரு வகையில் நாங்கள் அங்கே இருப்பதாகவே உணர்ந்தோம்.

அன்னார் கூறுகின்றார்: உங்களைப் பார்த்த பிறகு மேலும் உங்களின் அறிவுரைகளை கேட்ட பிறகு எங்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. மிகவும் ஆழமாக உள்ளத்தில் தாக்கம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. சொற்பொழிவுகளிலிருந்து மிகவும் பயன் பெற்றோம். ஏனென்றால் எனக்கு எனது ஏராளமான பொறுப்புகளின் பக்கம் கவனம் தோன்றியது. மேலும் நான் கவனக்குறைவாக இருந்த எனது ஏராளமான தவறுகள் எனக்கு தெரிய வந்தன.

அன்னார் கூறுகின்றார்கள்: பல்வேறு நாடுகளின் அஹ்மதிகள் ஒன்றுகூட்டி ஜல்ஸாவில் பங்கு பெறுகின்ற காட்சியானது எனது உள்ளத்தில் மிகுந்த வேதனையை உண்டாக்கியது. நான் துஆ செய்தேன். அல்லாஹ்வே! விரைவாக யமன் நாட்டிலும் நாங்கள் ஒன்றாக அமர்ந்து ஜல்ஸாவில் பங்கு பெறுவதற்கு ஏதுவாக அதுபோன்ற இடங்களை வழங்குவாயாக என்றும் நான் துஆவும் செய்தேன்.

உர்தன் நாட்டிலிருந்து ஹாமித் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு ஆண்டும் உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளை உண்மைப்படுத்தும் சாட்சிகளாக திகழ்ந்து மக்கள் ஜல்ஸாவில் கலந்து கொள்கின்றனர். இந்த வருட ஜல்ஸா ஒரு சிறப்பம்சத்தை கொண்டிருந்தது. ஏனென்றால் இந்த வருடம் Internet மற்றும் MTA மூலமாக முழு உலகிலிருந்தும் அஹ்மதிகள் மிக அதிகமாக கலந்து கொண்டிருந்தனர். அல்லாஹ் எல்லா வகையான நிலைமைகளிலும் ஜமாஅத்திற்கு உதவி அளித்து வருகின்றான். ஏனென்றால் இது ஓர் உண்மையான ஜமாஅத் ஆகும். நான் இந்த வருட ஜல்ஸாவில் காலத்தின் கலீஃபா பங்கு பெற்றிருந்ததை ஓர் ஆன்மீக கஷ்ஃப் காட்சியாகவும் அல்லது உலகத்தை சொர்க்கத்துடனும் ஒப்புமைப்படுத்துகின்றேன். அதன் கனிகளை நாம் இந்த மூன்று நாட்களில் சுவைத்திருக்கின்றோம். உண்மையான இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக ஆன்மீக வானில் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஒரு விண்ணின்

கூடாரமாக மாநாட்டுத் திடலை நான் உணர்ந்து கொண்டிருந்தேன்.

சிரியாவிலிருந்து முஹம்மத் பத்ர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஜல்ஸாவில் அஹ்மதி முஸ்லிம்கள் நிறம், இனம் மற்றும் கலாச்சாரத்தின் வேறுபாடுகளை கொண்டிருந்தபோதிலும் காலத்தின் கலீஃபாவின் தலைமையில் ஜமாஅத்தின் கொடியின் கீழ் ஒன்றிணைந்திருந்தனர். அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: நீர் பூமி முழுவதுமுள்ள கருவூலத்தை செலவிட்டாலும் கூட அவர்களின் உள்ளங்களை ஒன்றிணைக்க முடியாது என்ற இறைவனின் கூற்று இதன் மீது பொருந்துகின்றது. மாறாக, அல்லாஹ் தான் அவர்களின் உள்ளங்களை ஒன்றோடு ஒன்று இணைத்திருக்கின்றான். இது திருக்குர்ஆனின் வசனமாகும். இது நம்மீதான அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும்.

அடுத்து கூறுகின்றார்: ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்களின் முகங்களிலிருந்து அன்பின் உணர்வுகள் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. ஜல்ஸாவில் அமைதியும், சமாதானமும் மிகவும் அதிகமாக உணரப்பட்டது. அஹ்மதிகளாகிய நாம் அனைவரும் நமது ஆன்மீக தலைவரின் தலைமையில் ஓர் ஆன்மீக சோலைவனத்தில் இருக்கின்றோம். அதில் முற்றிலும் அமைதியும், நிம்மதியும், பாதுகாப்பும் மட்டுமே இருந்தது. இன்னும் என்னிடத்தில் ஏராளமான பலவீனங்கள் உள்ளன. நான் என்னிடத்தில் நல்ல மாறுதல்களை உருவாக்குவதற்கு மிகவும் முயற்சி செய்ய வேண்டும் என்ற உணர்வும் என்னிடம் மிக அதிகமாக ஏற்பட்டது. மேலும் இறையச்சத்தின் உயர் படித்தரங்களை பெற வேண்டும். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். குடும்ப வாழ்க்கையை சிறந்ததாக ஆக்குவதற்கு பெண்களுடன் அன்பு மற்றும் மென்மையுடன் நான் நடந்து கொள்ள நேரிடும் என்ற உணர்வும் ஏற்பட்டது.

ஜெர்மனியிலிருந்து அப்துர் ரஹ்மான் லப்னானி சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்கள்: நான் பெர்லின் பள்ளிவாசலில் ஜமாஅத் உறுப்பினர்களுடன் மூன்று நாள் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்டேன். ஜல்ஸாவின் ஆன்மீக சூழல்களை உணர்ந்தேன். ஜல்ஸாவிலிருந்து நாங்கள் மிக அதிகமாக பயன் பெற்றுள்ளோம். ஆன்மீகத்தில் ஏற்பட்டு வந்த குறைபாடுகள் நீங்கி தற்போது திரும்பி வந்துள்ளன.

பாலஸ்தீன் மேற்கு கரையிலிருந்து உமர் சாஹிப் கூறுகின்றார்கள்: இந்த ஜல்ஸா தினமும் நடைபெற வேண்டும் என்பது எனது விருப்பமாகும். அப்போது நாம் நபிமார்களைப் போன்றும், இறைநேசர்களைப் போன்றும் ஆகி விட முடியும். ஒரு தனித்தன்மையான உணர்வாக இருந்தது. அனைத்து சகோதரர்களும் ஒன்றுகூடி ஜல்ஸாவை கேட்டோம். ஒரு நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான சூழல் இருந்தது.

ஐவெரிகோஸ்டிலிருந்து ரிஸ்வான் ஷாஹித் சாஹிப் கூறுகின்றார்கள்: மா என்ற நகரத்தின் ஜமாஅத்தின் தலைவர் ஆன்தரே சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்:

ஜல்ஸாவில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்திய காட்சி இதுவாக இருந்தது. அதாவது அஹ்மதிய்யத் உலகம் கிலாஃபத்தின் கொடியின் கீழ் ஒன்றுகூடியுள்ளது. மேலும் கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் மும்முரமாக உள்ளது. ஓரிடத்தில் பகல் என்றால் மற்றொரு இடத்தில் இரவாக உள்ளது. எனினும் அனைவரும் காலத்தின் கலீஃபாவின் குத்பாவை கேட்பதற்காக எப்போதும் ஆயத்தமாக உள்ளனர். தங்களது ஈமானில் புத்துணர்வூட்டும் ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தனர்.

Ilyas kubatov என்ற கிர்கிஸ்தானின் நேஷனல் சதர் சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஜல்ஸாவில் எப்படிப்பட்ட சொற்பொழிவுகள் முன் வைக்கப்பட்டன என்றால் அதனைக் கேட்ட பிறகு என்னால் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியவில்லை. எனது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தன. நான் Youtube–ல் ஜல்ஸா பார்த்துக் கொண்டிருந்தேன். Youtube–ல் எனது சகோதர சகோதரிகளின் Comment–களை பார்த்தபோது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்கள் ஒருவர் மற்றவருக்கு ஜல்ஸா வாழ்த்துக்கள் என்ற அன்பளிப்பை வழங்கிக் கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவருக்கு அமைதியின் தூதுச் செய்தியை வழங்கிக் கொண்டிருந்தனர். எனது இந்த அனைத்து சகோதர சகோதரிகளும் பல்வேறு சமுதாயத்தை சாந்தவர்களாக உள்ளனர். உதாரணமாக, ரஷ்யன், உக்ரைனி, ஆர்மீனி, தாதாரி, கஸாகி மற்றும் கர்கஸி போன்ற சமுதாயங்களைச் சார்ந்தவர்களா உள்ளனர். இந்த காட்சி மிகவும் உள்ளத்தை கவரக்கூடியதாக இருந்தது.

சுலைமான் சாஹிப் என்ற நைஜீரியாவின் அஹ்மதி நண்பர் இவ்வாறு கூறுகின்றார்: காலத்தின் கலீஃபாவின் குத்பாவை பாவுஸா என்ற எனது தாய்மொழியில் கேட்பது எனக்கு மிகவும் ஒரு கண்ணியத்திற்குரிய விஷயமாகும். அன்னார் கூறுகின்றார்கள்: MTA 5-ல் பாவுஸா மொழியின் Edition நமது ஜல்ஸாவில் ஒளிமயமாக்கி விட்டன. எங்களைப் பொறுத்தவரை ஜல்ஸா மற்றும் பெருநாள் ஒன்றாகவே வந்து விட்டது. காலத்தின் கலீஃபாவை பாவுஸா மொழியில் கேட்பது ஒரு பேரின்பம் ஆகும். அதன் இன்பத்தை ஒரு பாவுஸா மொழியை அறிந்தவரே புரிந்து கொள்ள முடியும் என்று அவர் கூறினார். இந்த முறை முதல் முறையாக பாவுஸா மொழியில் உடனுக்குடன் நேரடியாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

இந்தோனேஷியாவின் ஒரு ஜமாஅத்தைச் சேர்ந்த Suwitono சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: ஜல்ஸாவை பார்த்த பிறகும், காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகளை கேட்ட பிறகும் எங்களது குடும்பத்தில் கிலாஃபத்துடனான அன்பில் ஒரு புதிய ஆன்மா உருவாகி உள்ளது. நாங்கள் மனித சகோதரத்துவத்தின் உயர் முன்னுதாரணத்தை கண்டுள்ளோம். அது உலகில் வேறு எந்த இடத்திலும் கிடைக்காது. உண்மையில் இனம் மற்றும் நிறத்தின் வேறுபாடுகளிலிருந்து விலகி மனிதர்களுக்கு மத்தியில் அன்பு மற்றும் அமைதியின் வடிவமாக கிலாஃபத் நிரூபணமாகி வருகிறது.

ஆஸ்திரேலியாவிலிருந்து ஆதிஃப் ஸாஹித் சாஹிப் கூறுகின்றார்கள்: துவக்க சொற்பொழிவின் நேரடி ஒளிபரப்பில் இரவு 12:25 மணியளவில் ஆரம்பமானது. அவ்வாறு இருந்தபோதிலும் மக்கள் ஒன்றாக அங்கு வந்தடைந்து மிகவும் நிம்மதியுடன் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கண்டனர். ஒரு சகோதரர் தனது ஒரு இளைய சகோதரரையும் அழைத்து வந்திருந்தார். இரவில் 10:30 மணியளவில் குத்பா நிறைவடைந்திருந்தது. அன்னார் குத்பாவிற்குப் பிறகு தமது மகனிடம் நீங்கள் வீட்டிற்கு செல்லுங்கள் என்று கூறினார். அதற்கு அவர் இல்லை. நான் இங்கு அமர்ந்தே குத்பா கேட்பேன் என்று கூறினார். இவ்வாறு அவரும் இரவில் அமர்ந்து கொண்டிருந்தார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஜல்ஸாவின் நிறைவுரையில் ஞாயிற்றுக்கிழமை இரவில் தாமதமாக ஆரம்பமாக இருந்தது. அடுத்த நாள் வேலை நாளாக இருந்தது. எனவே மக்கள் பள்ளிவாசலுக்கு வர மாட்டார்களோ! என்ற கவலை இருந்தது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் நிறைவுரையையும் கேட்பதற்கு வருகை தந்தார்கள். மாறாக, துவக்க அமர்வில் கலந்து கொண்டவர்களை விட அதிகமான எண்ணிக்கையில் வந்திருந்தனர்.

பிரேசிலிலிருந்து இப்ராஹீம் சாஹிப் கூறுகின்றார்கள்: அன்னார் கனிபஸாவ் பகுதியை சார்ந்தவர் ஆவார். படிப்பதற்கு பிரேஸில் சென்றிருந்தார். அவர் கூறுகின்றார்:

எனது கவனத்தை ஈர்த்த ஒரு விஷயத்தை நான் குறிப்பாக எடுத்துரைக்க விரும்புகின்றேன். அது கிலாஃபத் அமைப்பாகும். அதன் கீழ் ஒரே நேரத்தில் பல்வேறு நாடுகளை சார்ந்த மக்கள் எவ்வாறு ஒருவர் மற்றவருடன் இணைந்து கூட்டாக ஜல்ஸாவின் சொற்பொழிவுகளையும், நிகழ்ச்சிகளையும் கேட்டும், பார்த்தும் கொண்டிருந்தனர் என்பது ஆச்சரியமாக உள்ளது. அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் தான் இஸ்லாத்தின் உண்மையான பிரதிநிதி ஆகும். இமாம் மஹ்தி வராமல் இருந்திருந்தால் நம்மிடத்தில் இந்த ஒற்றுமையும், ஒருமைப்பாடும் ஏற்பட்டிருக்காது. இந்த ஜல்ஸாவின் மூலமாக அதிகமான விஷயங்களை கற்றுக் கொண்டுள்ளோம். மேலும் இந்த ஜமாஅத்தின் உறுப்பினராக இருப்பதிலும் நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

கர்கிஸ்தானிலிருந்து Atakhanova Dilyara சாஹிபா கூறுகின்றார்கள்: சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவை கலப்பற்றதன்மையுடன் கேட்பதும், பார்ப்பதும் மிகவும் விரும்பத்தக்கதாகும். காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகளை கேட்கும்போது மனிதன் எப்படிப்பட்ட உலகில் மூழ்கி விடுகின்றான் என்றால் அதில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி உருவாகி விடுகின்றது. நாங்கள் அனைவரும் ஒரு குடும்பமாக காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகளை இணைந்து கேட்டுக் கொண்டிருக்கின்றோம். குறிப்பாக பெண்களுக்கான காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவு இருந்தது. அதில் இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டன. அல்லாஹ் பெண்களாகிய நம்மை எவ்வாறு பாதுகாத்துள்ளான்? என்று எண்ணி குத்பாவை கேட்டு நாம் மேலும்

அல்லாஹ்வின் சந்நிதானத்தில் குனிய வேண்டும். குத்பாக்கள் எங்களை உணர்வுகளால் நிறையச் செய்து விடுகின்றன.

கோயிட்டாமாலாவிலிருந்து பைரன் சாஹிப் கூறுகின்றார்கள்: எனக்கு ஜல்ஸாவின் நாள் ஒரு சிறப்பான நாளாகும். அது ஒரு அற்புதத்தை விட குறைவானதல்ல. ஏனென்றால் ஜல்ஸாவிற்கு சிறது காலம் முன்பு கோயிட்டாமாலா ஜமாஅத்தின் பல்வேறு உறுப்பினர்கள் கொரோனா வைரஸ் காரணமாக நோய்வாய்ப்பட்டனர். மேலும் சிலரின் நிலைமை அபாயகரமான கட்டத்தை அடைந்திருந்தது. ஆனால் கோயிட்டாமாலாவின் அனைத்து சகோதரர்களும் இன்று இங்கு அமர்ந்து ஒன்றாக ஜல்ஸா கேட்டுக் கொண்டிருக்கிறோம். எந்த உறுப்பினரும் நோயாளியாக இல்லை. நான் கிருஸ்துவராக இருந்தபோது அற்புதங்களைப் பற்றி விநோதமான சிந்தனை இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து அற்புதங்களின் உண்மைத்துவம் எனக்கு புரிந்து விட்டது. உண்மையான அற்புதம் என்பது மனிதனிடத்தில் ஏற்படுகின்ற தூய்மையான மாற்றங்களை உருவாக்குவதே ஆகும். ஓர் ஆண்டிற்கு முன்பு நான் தனியாக பள்ளிக்கு வந்திருந்தேன். எனது குடும்பம் பள்ளிக்கு வருவதும், இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதும் சாத்தியமற்றதாக தோன்றியது. இன்று என்னுடன் எனது மனைவி மற்றும் பிள்ளைகள், தாயார், ஒரு சகோதரர், ஒரு மைத்துனர் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆகியோரை நான் என்னுடன் அழைத்து வந்துள்ளேன். நாங்கள் அனைவரும் அமர்ந்து இந்த ஜல்ஸாவை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நிச்சயமாக இதனை நான் ஓர் அற்புதமாக கருதுகின்றேன்.

இந்த சகோதரர் மிகவும் கலப்பற்றவரும், எளிமையான அஹ்மதியும் ஆவார். மிக சாதாரண வருமானத்தை கொண்டவர். ஆனால் தப்லீக்கிற்கான ஒரு பெரும் உணர்வு அவரிடத்தில் காணப்படுகிறது. அவர் எங்கு சென்றாலும் தப்லீக் செய்கின்றார். பல்வேறு சகோரர்களை தமது செலவில் பள்ளிக்கு அழைத்து வருகின்றார்.

கோயிட்டாமாலாவிலிருந்து Ramiro Martinez என்ற மற்றொரு சகோதரர் கூறுகின்றார்: இன்றைய நாள் எனக்கு மிகவும் சிறப்பான நாளாக இருந்தது. MTA மூலமாக UK ஜல்ஸா மற்றும் ஏனைய இடங்களின் வீடியோக்களின் காட்சிகளை கண்டு எனக்கு இந்த உலகளாவிய அமைப்பு நிச்சயம் இறை அமைப்பாகும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. காலத்தின் கலீஃபா நிச்சயம் இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அன்னார் சமூகத்தில் முஸ்லிம்கள் எப்படிப்பட்ட வடிவத்தை முன் வைக்க வேண்டும் என்றும் நமக்கு கூறுகின்றார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளேன். இனி காலத்தின் கலீஃபாவின் குத்பாவை நான் எப்போதும் கேட்பேன்.

இந்த சகோதரர் 35 வயது வரை பைபிள் கற்றுக் கொடுத்து வந்தார். பல்வேறு கிருஸ்துவ அமைப்புகளில் உறுப்பினராக இருந்தார். ஆனால் எப்போதும் கருத்து வேறுபாட்டின் காரணமாக ஒன்றிலிருந்து மற்றொரு பிரிவிற்கு மாறிக் கொண்டிருந்தார். பின்னர் சுயமே ஆய்வு செய்து அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். பள்ளிவாசலிலிருந்து 20 கி.மீ தொலைவில் அவரது இருப்பிடம் உள்ளது. அவர் ஜமாஅத்தை ஒப்புக் கொண்டதிலிருந்து இதுவரை ஒரேயொரு முறை தான் அதுவும் வண்டி பழுதானதன் காரணமாக ஜுமுஆவிற்கு வர முடியாமல் போனது. ஏனைய அனைத்து ஜுமுஆவிலும் தொடர்ந்து வருகின்றார். மேலும் தமது வீட்டில் ஐவேளை தொழுகைகளை பேணி வருகின்றார்.

கோயிட்டாமாலாவிலிருந்து Evalin Gonzalez என்ற பெண்மணி கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் ஓர் அமைப்பாகும். அனைவரும் ஒரு சங்கிலியில் பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை நான் UK ஜல்ஸாவில் நேரடியாக கலந்து கொண்டு அறிந்து கொண்டேன். இறைவன் நம்மை அந்த அமைப்பின் ஓர் அங்கமாக ஆக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளான். இது அவனின் கருணையாகும். நான் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். காலத்தின் கலீஃபாவின் கூற்றுகளை கேட்டதிலிருந்து உலகின் ஒரு பெரும் பகுதி இழப்பிற்குரியதாக உள்ளது. இது எனக்கு வேதனை அளிக்கின்றது. இதன் காரணமாகவே உலகின் பிரச்சனைகள் உள்ளன. போருக்கான சூழல் உள்ளது. அஹ்மதிய்யத்தில் இணைந்ததால் துஆவினால் அனைத்தும் சாத்தியமாகும் என்ற விஷயம் எனக்கு புரிய வந்துள்ளது. எங்களது ஏராளமான பிரச்சனைகள் துஆவினால் தீர்வு காணப்பட்டுள்ளது. சீர்குலைந்து கொண்டிருந்த குடும்பம் காலத்தின் கலீஃபாவின் துஆவினால் தப்பித்து விட்டது. காலத்தின் கலீஃபாவிற்கு நான் எவ்வாறு நன்றி தெரிவிப்பேன்? என்னிடத்தில் தற்போது அதற்கு வார்த்தைகள் இல்லை. நான் முதல் முறையாக கலந்து கொண்டதால் என்னால் இதனை கூற முடியும். அதாவது இந்த வருடம் எனது வெற்றிகளுக்கான வருடமாகும். நாங்கள் முழுமையானவர்கள் அல்ல. ஆயினும் எங்களது ஆன்மீகத்தின் ஒரு புதிய பயணம் தொடங்கி விட்டது. நான் அடுத்த வருடமும், எல்லா வருடமும் ஜல்ஸாவில் கலந்து கொண்டு வருவேன்.

நைஜீரியாவிலிருந்து அஸ்யா பாபா என்ற அஹ்மதி நண்பர் இவ்வாறு கூறுகின்றார்: நான் குத்பாவில் இமாம் மஹ்தி (அலை) எவ்வாறு தமது ஓய்வை விட விருந்தினர்களின் ஓய்விற்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள்? என்று விருந்து உபசரிப்பு தொடர்பாக செவியுற்றேன். காலத்தின் கலீஃபா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னுதாரணத்தை எடுத்து வைத்தார்கள். அன்னார் விருந்தினர்களின் ஓய்விற்காக தமது படுக்கையையும் கொடுத்து விட்டார்கள். மேலும் இரவு முழுவதும் கடினத்தில் இரவைக் கழித்தார்கள். பின்னர் அதற்குரிய உதாரணத்தை நான் ஜல்ஸாவிலும் பார்த்தேன். ஜல்ஸாவில் சகோதரத்துவ சூழல் எவ்வாறு நிலைபெற்றிருந்தது என்பதையும் நான் கண்டு கொண்டேன். சேற்றில் சிக்கிக் கொண்ட வண்டிகளை காதிம்கள் தங்களையும் பொருட்படுத்தாமல் வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள். இந்த சகோதரத்துவத்தின் குறைவின் காரணமாகவே இன்று முஸ்லிம்கள் உலகில் இழிவடைந்துள்ளனர். இந்த தீர்வை நமக்கு கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்பானியாவிலிருந்து சமத் கெளரி சாஹிப் எழுதுகின்றார்கள்: புஜார் என்ற மருத்துவ நண்பர் ஒருவர் இவ்வாறு கூறினார்: நான் காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகள் மட்டுமின்றி UK ஜல்ஸாவின் ஏனைய நிகழ்ச்சிகளையும் கண்டேன். இன்றைய நாட்களில் ஜல்ஸா ஸாலானா மக்களின் நேர்வழிக்கு ஒரு முக்கிய தேவையாகும். அவர் கூறுகின்றார்: காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவுகள் மிக எளிமையான சொற்களில் இருந்தன. ஆனால் தற்போதைய காலத்தை குறித்த ஒரு மகத்துவமிக்க தூதுச் செய்தியை கொண்டிருந்தன. அதுவும் நல்லொழுக்கத்தின் அனைத்து சட்டங்களையும் சமூகம் சீர்குலைத்துவிட்ட நேரத்தில் மிக முக்கிய தூதுச் செய்தியாக அது அமைந்திருந்தது. அவர் உலகத்தை குறித்து கூறுகின்றார். இந்த மக்கள் மனிதத்துவத்தின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதாகவும், உலகத்தை பாதுகாப்போம் என்றும் கூறுகின்றனர். ஆனால் இந்த விதிமுறையை உண்மையில் 1500 ஆண்டுகளுக்கு முன்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டி விட்டார்கள் என்பதை இந்த மக்கள் மறந்து விட்டனர். இன்று அதன் கொடியை அஹ்மதிய்யா ஜமாஅத் ஏந்தி நிற்கின்றது. இந்த முறை ஜல்ஸாவில் நான் கண்ட காட்சிகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் Humanity First ஆஃப்ரிக்காவின் ஏழை பகுதிகளில் ஆற்றுகின்ற தொண்டின் காட்சிகள் என்னை மிகுந்த தாக்குத்திற்கு உள்ளாக்கியது. அந்த குழந்தைகளின் கண்கள் உண்மையின் மீதுள்ள திரையை அகற்றக்கூடியதாக இருந்தது. அவர்களுக்கு முன்னால் உலகின் பெரும் பெரும் தலைவர்களின் சொற்களும் வாதங்களும் பொருளற்றதாகும். அந்த கண்கள் வாழ்க்கையை தேடிக் கொண்டிருக்கின்றன. தண்ணீர் வாழ்க்கை(யின் உயிர்நாடி) ஆகும். அதனை அவர்கள் முதல் முறையாக எவ்வளவு மகிழ்ச்சியுடன் சுவைத்துக் கொண்டிருந்தனர் என்பதையும் நான் கண்டு கொண்டேன்.

MTA Africa-வின் அறிக்கை இவ்வாறு வந்துள்ளது. கடந்த ஆண்டுகளைப் போன்று இந்த வருடமும் MTA Africa மூலமாக ஆஃப்ரிக்கா முழுவதும் UK ஜல்ஸாவின் ஒளிபரப்புகள் பார்க்கப்பட்டன. ஜல்ஸா ஸாலானாவின் ஒளிபரப்புகள் மட்டுமின்றி வேறு சில ஏனைய உள்ளூர் TV Channel-களிலும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பட்டன. இந்த வருடம் கேம்பியா, சிராலியோன், லைபீரியா, கானா, உகண்டா, மாலி, ரவாண்ட், பர்வன்டி, செனிகால், ஃபுர்கினோஃபாஸு ஆகிய இடங்களில் 14 பலதரப்பட்ட TV Satelites மற்றும் நிறுவனங்கள் எனது குத்பாக்களை நேரடியாக ஒளிபரப்பு செய்தன. ஒரு கணக்கின் அடிப்படையில் 25 மில்லியன் கூடுதலான மக்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது.

கொரோனாவின் காரணமாக ஆஃப்ரிக்காவில் வெளிநாட்டு விருந்தினர்களால் ஜல்ஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. எங்களுக்கும் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர்களின் விண்ணப்பங்கள் வந்திருந்தன. பாவுஸா மொழியில் முதன் முறையாக மொழியாக்கம்

நடைபெற்றுள்ளது. இந்த மொழி ஆஃப்ரிக்காவில் 25 மில்லியனை விட கூடுதலான மக்கள் பேசுகின்ற மொழியாகும். ஆஃப்ரிக்காவின் பல்வேறு 16 TV சேனல்களில் UK ஜல்ஸாவின் செய்திகள் ஒளிபரப்பப்பட்டன. இந்த சேனல்களை பார்ப்பவர்களின் எண்ணிக்கை 8 மில்லியனை விட கூடுதலாகும்.

உகண்டாவிலிருந்து மிஷனரி இன்சார்ஜ் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஜல்ஸாவிற்கு முன்பாக எதிரிகள் பல்வேறு சமூக வலைதளங்களில் ஜமாஅத்திற்கு எதிராக பொய் பிரச்சாரம் செய்ய தொடங்கி இருந்தனர். இவர்களுக்கென தனி குர்ஆன் உள்ளது. எனவே ஜல்ஸாவை கேட்காதீர்கள் என்றெல்லாம் கூறினர். ஜல்ஸா கேளுங்கள் என்று நம்மவர்களும் விளம்பரம் கொடுத்தபோது ஜல்ஸா கேட்காதீர்கள். ஏனென்றால் இவர்களின் திருக்குர்ஆன் வேறாகும் என்று எதிரிகளும் பொய் பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருந்தனர். இந்த பொய் பிரச்சாரத்தின் விளைவாக உகண்டாவில் ஒரு பெரும் எண்ணிக்கையில் மக்களின் கவனம் ஆண்டு மாநாட்டின் பக்கம் ஏற்பட்டது. நேர் மறையான விளைவு ஏற்பட்டு விட்டது. ஏராளமான அஹ்மதி அல்லாத சகோதரர்கள் இந்த விஷயத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது ஜமாஅத்திற்கு எதிராக செய்யப்பட்ட இந்த பொய் பிரச்சாரத்தின் காரணமாக நாங்கள் ஜல்ஸாவை குறித்த தகவல்களை தேடினோம். மேலும் ஜல்ஸாவை பார்த்த பிறகு எங்களது உள்ளங்கள் மாறி விட்டன. மேலும் அஹ்மதிகளின் திருக்குர்ஆனும் ஒன்றுதான் என்பதும் தெரிய வந்தது. இன்னும் கூறப்போனால், அஹ்மதிகள் மற்றவர்களைக் காட்டிலும் திருக்குர்ஆனின் மீது அதிக அன்பு கொண்டுள்ளனர் என்று கூறினர்.

உகண்டாவின் ஒரு கத்தோலிக்க நண்பர் எழுதியுள்ளார்: நான் உகண்டாவின் National Tv ல் ஜல்ஸா தொடர்பான விளம்பரத்தை பார்த்தேன். அதில் UK வில் ஒரு இஸ்லாமிய மாநாடு நடைபெறுகின்றது என்று கூறப்பட்டது. அப்போது நான் இது எப்படிப்பட்ட மாநாடு என்பதை பார்க்க வேண்டுமே? என்று கூறினேன். எனவே ஒரு வாரத்திற்குப் பிறகு நான் TV-ஐ ஆன் செய்தேன். அப்போது வெள்ளை நிற தலைப்பாகை அணிந்திருந்த ஒரு நபர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். நான் அந்த சொற்பொழிவை கேட்க துவங்கினேன். அதன் பிறகு TV-யின் முன்னாலிருந்து என்னால் எழுந்து செல்ல முடியவில்லை. ஆரம்பம் முதல் கடைசி வரை முழுமையாக சொற்பொழிவை கேட்டேன். பெண்களைப் பற்றிய இஸ்லாமிய போதனைகள் வேறு எங்கும் கிடைப்பதில்லை. மேலும் பெண்களின் உரிமைகள் குறித்து இதுபோன்று உரத்த குரலில் குரல் கொடுத்த வேறு எந்த நபரையும் நான் கண்டதில்லை. அந்த நபர் அப்போதே திரையில் கொடுக்கப்பட்ட நம்பரை தொடர்பு கொண்டார். மேலும் பெண்களுக்காக வழங்கப்பட்ட இந்த சொற்பொழிவின் Script தமக்கு வேண்டுமென்று கூறினார். ஆக அவருக்கு அந்த Script அனுப்பி வைக்கப்படும் இன்ஷா அல்லாஹ்.

அஹ்மதி அல்லாத நண்பரான அப்துல்லாஹ் கோயி சாஹிப் லைபீரியாவிலிருந்து கூறுகிறார்கள்:

ஜல்ஸாவை பார்த்தற்கான எனது நோக்கம் இவ்வாறாக இருந்தது. அதாவது அஹ்மதி முஸ்லிம்கள் மற்றும் ஏனைய முஸ்லிம்களுக்கு மத்தியிலுள்ள வேறுபாட்டை நான் அறிய விரும்பினேன். மேலும் அஹ்மதி அல்லாத ஆலிம்கள் ஜமாஅத்தை குறித்து கூறுகின்ற விஷயங்களின் உண்மைத்துவம் என்ன? என்பதை நான் தெளிவு பெற விரும்பினேன். ஜல்ஸாவை பார்த்த பிறகு ஜமாஅத்திற்கு எதிராக செய்யப்படும் பிரச்சாரங்கள் அனைத்தும் எதிர்மறையான பிரச்சாரங்களாகும் என்ற உறுதி எனக்கு ஏற்பட்டு விட்டது. அவை அனைத்தும் பொய் ஆகும். உண்மையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாகவே இஸ்லாத்தின் தூதுச் செய்தி உலகில் சென்றடைந்து வருகிறது. ஏனைய மக்களுக்கும் இந்த உண்மைத்துவத்தை அறிவித்துக் கொடுப்பது எனது கடமையாக நான் கருதுகின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் தான் உண்மையில் இஸ்லாமிய மார்க்கத்தை பரப்புகின்றது.

லைபீரியாவிலிருந்து அஹ்மதி அல்லாத நண்பர் ஒருவர் இவ்வாறு கூறுகின்றார்: மத நல்லிணக்கத்தின் அடிப்படையில் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்காக நான் கலந்து கொண்டிருந்தேன். ஆனால் மேடையின் திரையில் எழுதப்பட்டிருந்த திருக்குர்ஆன் வசனங்களை வாசித்தபோது நான் எல்லையற்ற ஆச்சரியத்திற்கு ஆளானேன். அஹ்மதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று ஒப்புக் கொள்வதில்லை. மேலும் அன்னார் (ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துவதில்லை என்று அஹ்மதி அல்லாத ஆலிம்கள் விளம்பரப்படுத்தி இருந்தார்கள். ஆனால் அவை அனைத்திற்கும் நேர்மாற்றமாக அஹ்மதிகள் முழு உலகிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பை பரப்பி வருகின்றனர். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்குறிப்பையும் மீண்டும் மீண்டும் தமது சொற்பொழிவில் செய்தபோது அதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பிற்கு பேசும் சான்றாக அமைந்திருந்தது.

ஏனைய இந்த விஷயங்கள் இடையில் வந்து விட்டன. எவ்வாறிருப்பினும் தற்போது மீண்டும் Press & Media-வின் குறிப்புகள் கூறப்படும். Press & Media-வின் மூலமாகவும் அல்லாஹ்வின் அருளால் Coverage நடைபெற்றுள்ளது. BBC-யும் தமது மண்டல TV-யில் செய்தி ஒளிபரப்பியது. BBC South-ம் செய்தி ஒளிபரப்பியது. ஒரு Documentary-யும் ஒளிபரப்பியது. மேலும் 200 நாடுகளில் பார்க்கப்படும் BBC World-ம் அதனை ஒளிபரப்பியது. இதுமட்டுமின்றி BBC National Channel-களிலும் இந்த செய்தி ஒளிபரப்பானது. மறு ஒளிபரப்பும் நடந்து வந்தது. குறிப்பாக எத்தனை நபர்கள் வரை தூதுச் செய்தி வரை சென்றடைந்தது என்று கூறுவது கடினமாகும். ஆயினும் ஒரு கணக்கீட்டின் அடிப்படையில் சுமார் 52 மில்லியன் நபர்கள் வரை இந்த Coverage சென்றடைந்துள்ளது. 40 Website-கள் ஜல்ஸாவின் செய்தியை ஒளிபரப்பியுள்ளன. அவர்களின் வாசர்களின் எண்ணிக்கை 27 மில்லியன் ஆவர். 20 செய்தித்தாள்களில் ஜல்ஸா குறித்து கட்டுரைகள் வெளியாகியுள்ளன. அவற்றின் வாசகர்களின் எண்ணிக்கை 7 லட்சத்தி 35 ஆயிரம் ஆகும். ஜல்ஸா தொடர்பாக 16 ரேடியோக்களில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின. 16 மில்லியன் மக்கள் வரை தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது. அதேபோன்று 12 தொலைக்காட்சி சேனல்களில் ஜல்ஸாவின் செய்திகள் ஒளிபரப்பாகியுள்ளன. அதன் Coverage-ன் எண்ணிக்கை 22 லட்சம் நபர்கள் ஆவர். இந்த அனைத்து வழிமுறைகள் மூலம் மட்டுமின்றி சமூக வலைதளங்களின் மூலமாகவும் ஏறக்குறைய 63 லட்சம் நபர்கள் வரை ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது.

டாக்காவிலிருந்து பங்களாதேஷ் அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: டாக்காவில் தலைமையக பள்ளிவாசல் நாராயின்கன்ஞ், பிரம்மன்பாடியா, சட்டாகான்ங் ஆகிய இடங்களில் Live Streaming மூலமாக மக்கள் கலந்து கொண்டனர். அறிக்கையின் அடிப்படையில் 800-ற்கும் கூடுதலான ஜமாஅத் அல்லாத விருந்தினர்கள் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்டு பயனடைந்தனர். மேலும் பங்களாதேஷின் 10 Online போர்டல்ஸ் மற்றும் செய்தித்தாள்களில் ஜல்ஸாவின் செய்திகள் படத்துடன் வெளியாகி உள்ளன. அவற்றில் 3 பத்திரிகைகள் மிகவும் பிரபல்யமான மற்றும் அனைவரும் அறிந்த பத்திரிகைகள் ஆகும். மிகவும் குறைந்தபட்ச கணக்கீட்டின் அடிப்படையில் ஆன்லைன் போர்டல்ஸ் மற்றும் செய்தித்தாள்கள் மூலமாக குறைந்தபட்சம் 54 லட்சம் மக்கள் இந்த செய்திகளை படித்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

MTA International மூலம் நடைபெற்ற ஒளிபரப்பும் உள்ளது. அது இவ்வாறாகும். 15 மில்லியனை விட கூடுதலான மக்கள் Youtube-ல் பார்த்துள்ளனர். சுமார் 5 லட்சம் மணி நேரம் Youtube மூலமாக MTA பார்க்கப்பட்டுள்ளது. Instragram-ல் 35000 மக்கள் MTA பக்கத்தை பார்வையிட்டுள்ளனர். மேலும் 97.1 மில்லியன் மக்கள் வரை அது சென்றடைந்துள்ளது. Twitter-ல் ஒரு லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் MTA Coverage ஐ பார்த்துள்ளர். 35000–ற்கும் அதிகமான மக்கள் அதை விரும்பியுள்ளனர். மேலும் மற்றவர்களுக்கும் அதனை அனுப்பியுள்ளனர். Facebook மூலமாகவும் 5.5 லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. இதேபோன்று MTA-வின் Website-லும் ஒரு லட்சம் முறை பார்க்கப்பட்டுள்ளது. MTA On demand மூலமாக இரண்டு லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் ஜல்ஸாவை பார்த்துள்ளனர்.

ஆக இவை சுருக்கமான சில விஷயங்களாக இருந்தன. இதிலும் கூட அதிக நேரம் ஆகிவிட்டது. அல்லாஹ் ஜல்ஸாவின் தொலைதூர விளைவுகளை உருவாக்குவானாக. மேலும் நல்ல ஆன்மாக்களை அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தின் பக்கம் முன்பை விட அதிகமாக கவனம் செலுத்த வழிவகை செய்வானாக. மேலும் பெயர்தாங்கி ஆலிம்களின் தீங்கிலிருந்து ஜமாஅத்தையும், அனைத்து நல்லுள்ளங்களையும் பாதுகாப்பானாக.

(தமிழில்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 16 Sep 2021 Issue No. 37

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

இஸ்லாம் போன்ற முழுமையான மார்க்கத்தை கொடுத்து அனுப்பினான். மேலும் அன்னாரை காத்தமுன் நபிய்யீனாக ஆக்கியுள்ளான். மேலும் திருக்குர்ஆன் போன்ற முழுமையான மற்றும் வேதங்களில் சிறந்த வேதத்தை வழங்கியுள்ளான். கியாமத் வரை இனி எந்த வேதமும் வராது. மேலும் எந்தவொரு புதிய ஷரீஅத்தை எடுத்துக் கொண்டு எவரும் வர மாட்டார். பின்னர் அவ்வாறிருந்தும் நமக்கு வழங்கப்பட்டுள்ள ஆற்றல்கள் சிந்தனைகளிலிருந்து நாம் பணி செய்யவில்லையென்றால், இறைவனின் பக்கம் அடியெடுத்து வைக்கவில்லையென்றால் பின்னர் அது எத்தனை பெரிய சோம்பேறித்தனமும், இயலாமையும், நன்றிகேடாகவும் இருக்கும்.

**மனித வாழ்வின் நோக்கம்**

சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ் இந்த முதலாவது அதிகாரத்திலேயே நமக்கு எந்த அளவுக்கு தெளிவான வழிமுறையில் அருளின் வழியை கூறி விட்டான். இந்த அதிகாரத்தில் அதாவது காத்தமுல் கிதாப் (வேதங்களின் சிறந்த வேதம்)மற்றும் உம்முல் கிதாப் (வேதத்தின் தாய்) என்ற பெயரைக் கொண்ட அந்த அதிகாரத்தில் தெளிவாக இதனை கூறியுள்ளான். மனித வாழ்க்கையின் நோக்கம் என்ன? அதனை அடைவதற்கான வழிகள் என்ன? என்பதை தெளிவாக கூறிவிட்டான். اِيَّاكَ نَعۡبُدُ (நாங்கள் உன்னையே வணங்குகிறோம்) என்பது ஒரு வகையில் மனித இயல்பின் அசல் விருப்பமும், தேட்டமும் ஆகும். மேலும் அது اِيَّاكَ نَسۡتَعِيۡنُ (நாங்கள் உன்னிடமே உதவியும் தேடுகிறோம்) என்பதை மேற்கொள்ளால் முழுமை பெற முடியாது. ஆனால் اِيَّاكَ نَعۡبُدُ (நாங்கள் உன்னையே வணங்குகிறோம்) என்பது اِيَّاكَ نَسۡتَعِيۡنُ (நாங்கள் உன்னிடமே உதவியும் தேடுகிறோம்) என்பதற்கு முன் வைக்கப்பட்டு இந்த கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது எதுவரை முடியுமோ மனிதன் தனது ஆற்றல், தைரியம் மற்றும் புரிதலுக்கேற்ப இறைவனின் திருப்தியின் வழிகளை மேற்கொள்வதில் முயற்சியும், உழைப்பும் செய்வது முதலில் அவசியமாகும். இறைவனால் வழங்கப்பட்ட ஆற்றல்களைக் கொண்டு முழுமையாக பணி செய்ய வேண்டும். மேலும் அதற்கு பிறகு அல்லாஹ்விடத்தில் அது முழுமை பெறுவதற்கும் நல்விளைவை ஏற்படுத்துவதற்கும் துஆ செய்ய வேண்டும். இது முதலில் அவசியமாகும். மனித வாழ்க்கையின் நோக்கம் சிராத்தே முஸ்தகீம் (நேரான வழியில்) வழி நடப்பதும், அதனைத் தேடுவதும் ஆகும். இந்த கருத்து இந்த சூராவில் இந்த சொற்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.


اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۔ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ (1:6,7)

அல்லாஹ்வே! எங்களுக்கு நேரான வழியை காட்டுவாயாக. நீ எந்த மக்கள் மீது அருள் பொழிந்தாயோ அவர்களின் வழியை எங்களுக்கு காட்டுவாயாக. இது எப்படிப்பட்ட துஆ என்றால் இதனை எல்லா நேரமும் எல்லா தொழுகையிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் வேண்ட வேண்டும். இந்த அளவிற்கு இது மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருப்பதே அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 321 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

*(திருக்குர்ஆன் விளக்கவுரை... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அரபி அறிந்த மக்களே நல்ல முறையில் புரிந்து கொள்ள முடியும். முஸ்லிம்கள் சுயமே முற்றுகையிடப்பட்டிருக்கும்போதும், அவர்களின் உயிர்கள் அபாயத்தில் இருக்கும்போதும் நீங்கள் முழு ஆற்றலையும் செலவிடுங்கள். திருக்குர்ஆனை அழிப்பதற்கு முழு வலிமையையும் பயன்படுத்துங்கள். நாம் சுயமே அதனை பாதுகாப்போம் என்று கூறப்படுவதே விநோதமான விஷயமில்லையா? மேலும் அந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் அன்னாரின் தோழர்கள் விடுதலை ஆகுகின்ற ஒரு நாளும் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னேற்றம் கிடைக்கின்றது. ஒரு மகத்துவமிக்க ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து விடுகின்றது. மேலும் திருக்குர்ஆன் முழுமையான முறையில் பாதுகாக்கப்படுகிறது. மேலும் இன்று வரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இனியும் பாதுகாக்கப்பட்டு வரும். இந்த தன்னிகரற்ற பாதுகாப்பு உலகின் வேறொரு நூலுக்கு கிடைத்துள்ளதா?

சர் வில்லியம் மூர் லைஃப் ஆப் முஹம்மது என்ற தமது நூலில் விவாதத்திற்குப் பிறகு இவ்வாறு எழுதுகின்றார்: இது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் வழங்கிய அதே திருக்குர்ஆன் தான் என்பதில் ஐயம் இல்லை. நாம் மிகவும் வலிமையான எண்ணத்தின் அடிப்படையில் இதனை கூற முடியும். திருக்குர்ஆனிலுள்ள ஒவ்வொரு வசனமும் அசல் வசனமாகும். மேலும் முஹம்மத் (ஸல்) அவர்களால் மாற்றத்திற்குள்ளாக்கப்படாத நூலாகும். நம்மிடத்தில் எல்லா வகையான சான்றுகளும் உள்ளன. நம்மிடமுள்ள இந்த வேதம் முஹம்மத் (ஸல்) அவர்கள் சுயமே உலகிற்கு முன்னால் வழங்கிய அதே வேதம் தான். இதற்கு உள்ளார்ந்த சான்றுகளும் வெளிப்புற சான்றுகளும் நம்மிடம் உள்ளன. அன்னார் (ஸல்) அவர்கள் இதையே பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

திருக்குர்ஆன் எழுதப்படிக்கத் தெரியாதவரிடம் வந்தது. மேலும் எல்லா வகையிலும் பாதுகாப்பாக உள்ளது. இது திருக்குர்ஆன் அல்லாஹ்வின் புறமிருந்து இறங்கியது என்பதற்கு எத்துனை பெரும் சாட்சியமாக உள்ளது. ஆனால் தவ்ராத் மற்றும் இஞ்ஜீல் தமது காலத்தில் அறிவார்ந்த சமுதாயங்களிடம் வந்தது. ஆனால் அது பாதுகாப்பாக இருக்க முடியவில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 15–18 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**ஜெர்மன் தேசிய மஜ்லிஸே ஆமிலாவின் ஹுஸூர் (அய்ய) அவர்களுடனான காணொளி சந்திப்பு**

ஹுஸூர் (அய்ய) அவர்களுடனான ஒன்றரை மணிநேர சந்திப்பு ஆன்மாவை குளிரச் செய்து விட்டது. மேலும் ஒவ்வொரு உறுப்பினரிடமும் மார்க்க தொண்டாற்றுவதற்கு மின்னூட்டத்தை பாய்ச்சி விட்டது.

(முஹம்மது இல்யாஸ், பொதுச் செயலாளர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஜெர்மனி) நன்றி: அல்ஃபஸல் அக்டோபர் 23, 2020

*126 வது காதியான் ஆண்டு மாநாடு*

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் துஆக்களுடன் இப்போதிருந்தே ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு நிய்யத் வைத்து தயாரிப்புகளை தொடங்கி விடுங்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad